# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## இம்மானுவேல்

## தேவன் நம்மோடிருக்கிறார்

மத்தேயு 1:23




THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

November - December 2024

Volume : 64

ஆண்டு சந்தா ₹120/-

Issue : 6

# ஆண்கள் ஐக்கிய 15-வது மாநில முகாம் - மதுரை























ஆசிரியரிடமிருந்து........!



# இம்மானுவேல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உலக இரட்சகர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக! நம் ஆண்டவராகிய இயேசுவுக்கு பல நாமங்கள் வழங்கப்பட்டுள்ளதை வேதத்தில் காண்கிறோம். அவருடைய ஒவ்வொரு நாமமும் ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தை நமக்கு அளிக்கிறது. இப்படிப்பட்ட மேன்மை மிகுந்த நாமங்களில் ஒன்றான "இம்மானுவேல்" என்னும் அவருடைய பெயரையும், அது நமக்கு அளிக்கும் ஆசீர்வாதங்களையும் பற்றி நாம் தியானிப்போம்.

"இதோ ஒரு **கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்"** (மத்தேயு 1:23). இதைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி பல நூற்றாண்டுகளுக்கு முன்பு "ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தை கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" என்கிறார் (ஏசாயா 7:14). இவ்விதமாய் நம்மோடு இருப்பதற்காகவே நம் ஆண்டவர் இயேசு பரலோகத்தை விட்டு மண்ணுலகில் வந்து பிறந்தார். யோவான் நற்செய்தியில் கூறப்பட்டுள்ளபடி, ஆதியிலே வார்த்தையாக, தேவனோடு தேவனாக இருந்தவர், மாம்சமாகி நமக்குள்ளே வந்து வாசம்பண்ணினார் (யோவான் 1:1,14). இம்மானுவேல் என்ற இந்த விசேஷித்த பெயரிலே மனிதர்களுடைய மிக முக்கியமான மூன்று பிரச்சனைகளுக்கு தீர்வு இருக்கிறது. உங்கள் வாழ்வில் கூட இப்பிரச்சனைகள் இருக்குமானால் தேவன் இன்று உங்களுக்கு ஒரு தீர்வை தருவார்.

## நமது தனிமைக்கு தேவனின் பதில்
## God's Answer to Our Loneliness

முதலாவதாக இம்மானுவேல் என்னும் நம்மோடு கூட இருக்கும் நம் ஆண்டவர் நமது தனிமைக்கு தீர்வாக இருக்கிறார். தனிமை என்றால் என்ன? தனித்திருத்தல் (Solitude), தனிமைப்படுத்திகொள்ளல் (Isolation), தனிமை (Loneliness), இவை மூன்றும் முற்றிலும் வெவ்வேறானவை. தனித்திருத்தலும், தனிமைப்படுத்திக்கொள்ளுதலும் நாமே தெரிந்தெடுப்பது. ஆனால் தனிமை என்பதோ முற்றிலும் கைவிடப்பட்ட, ஒதுக்கப்பட்ட, மறக்கப்பட்ட, விசாரிப்பற்ற சூழ்நிலையில் உருவாகும் ஒரு வலி மிகுந்த வேதனையான உணர்வு. நம் ஒவ்வொருவருக்குள்ளும் நாம் புரிந்து கொள்ளப்பட வேண்டும், நேசிக்கப்பட வேண்டும், பிறருக்கு பயன்படும் நபராக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. அத்தகைய நம் உணர்வுகள் மதிக்கப்படாமல், நாம்

உதாசினப்படுத்தப்படும்போது, தனிமை உணர்வு நம்மை வாட்டுகிறது. தனிமை என்பது நம்மை முடக்கிவிடும் உணர்வாகும். இன்று 80% மனநோயாளிகள் தனிமை உணர்வால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்கொலைக்கும், மாரடைப்புக்கும் மிக முக்கிய காரணிகளுள் ஒன்று தனிமை உணர்வாகும்.

ஆனால் இயேசுவோ நம் தனிமையை போக்க நம்முடன் கூடவே இருக்கிறார். ஏனெனில் இயேசுதாமே இந்த தனிமையை அனுபவித்து அறிந்தவராய் இருக்கிறார். "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாய் இருந்தார்", என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 53:3). மேலும் அவர் தமது சொந்த மக்களாலேயே ஏற்றுக்கொள்ளப் படாதவராய் இருந்தார் (யோவான் 1:11). கல்வாரி சிலுவையில் நமக்காக அவர் தொங்கியபொழுது, நமது பாவங்களின் நிமித்தம், தமது பிதாவின் உறவை இழந்து, தனிமையில் தவித்து, "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்", என்று கதறியதை பார்க்கிறோம் (மத். 27:46; மாற்கு 15:34).

ஆகையால் நமது தனிமை உணர்விலிருந்து நமக்கு விடுதலை அருளும்படி, இயேசு நம்மை சிநேகிதர் என்று அழைக்கிறார் (யோவான் 15:15). பணம் பதவி இருந்தும் மக்களால் வெறுக்கப்பட்டு தனிமையுணர்வோடு இருந்த சகேயுவை பெயர் சொல்லி அழைத்து, தனிமையைப் போக்கி சந்தோஷப்படுத்தினார் (லூக்கா 19:1-9). பவுலும் கூட எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் தேவன் தன்னுடன் கூட துணையாக நின்றதை குறித்து சாட்சி பகர்கிறார் (2 தீமோ.4:16-17). இன்று நீங்கள் எப்படிப்பட்ட தனிமை உணர்வில் வாடினாலும் சோர்ந்து போகாதிருங்கள். உங்கள் தனிமையை போக்க, உங்களுக்கு ஆறுதலாக இம்மானுவேலாகிய தேவன் உங்களுடன் இருக்கிறார்.

## நமது பயத்திற்கு தேவனின் பதில்
## God's Answer to Our Fearfulness

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்", என்று வாக்குரைத்த (ஏசாயா 41:10) நம் தேவன் நம் பயங்களை நீக்கும்படி நம்முடன் இருக்கிறார். தாவீதின் அறிக்கையை கவனியுங்கள்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். ஏனெனில் தேவரீர் என்னோடே கூடயிருக்கிறீர்" (சங்.23:4). தேவன் நம்மோடே கூட இருக்கிறபடியால் நம் பயத்திற்கு தீர்வு உண்டாகிறது.

இன்று அநேகர் பலவிதமான பயங்களால் நிறைந்திருக்கிறார்கள். "பயம்" மனிதர்களை உறைந்து போக செய்யும் ஒரு பயங்கர உணர்வு. ஆனால் கிறிஸ்மஸ் நற்செய்தியோ பயத்தை போக்குகிறதாய் இருக்கிறது. இயேசு பிறப்பின் நற்செய்தியை தேவதூதன் தோன்றி மேய்ப்பர்களுக்கு அறிவித்தபோது, முதலில் கூறப்பட்ட வார்த்தை "பயப்படாதிருங்கள்" என்பதுதான் (லூக்கா 2:10). லூக்கா முதல் இரண்டு அதிகாரங்களில் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியாக "பயப்படாதே" என்ற வார்த்தை மூன்று நபர்களுக்கு கூறப்படுவதை காண முடியும். இந்த நிகழ்வுகள் நம் வாழ்விற்கு எப்படி பொருந்தும் என்று பார்ப்போம்.

மேய்ப்பர்கள் என்பவர்கள் யூத சமுதாயத்தின் அடிதட்டு மக்களாக, சிறுமையானவர்களும், மிகவும் அற்பமாய் எண்ணப்பட்டவர்களாயும் இருந்தார்கள். ஆனால் கிறிஸ்து என்னும் இரட்சகர் பிறந்த மகிழ்ச்சியான செய்தி இராஜாக்கள், ஆசாரியர்கள் என்ற உயர்தட்டு மக்களுக்கு அறிவிக்கப்படாமல் சாதாரணமான

மேய்ப்பர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்டது (லூக்கா 2:10-14). இந்நிகழ்வு நம்மை அங்கீகரித்து, விலையேற பெற்றவர்களாய் மாற்றும் தேவன் நம்முடன் இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. காபிரியேல் தேவதூதன் மரியாளை வாழ்த்தி, “பயப்படாதே” என்று கூறி, இயேசு அவளிடம் பிறக்கப்போவதை அறிவிக்கிறான் (லூக்கா 1:30). மரியாளோ, “இது எப்படி ஆகும், புருஷனை அறியேனே” என்றாள் (லூக்கா 1:34). அதற்கு தேவதூதன், “தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை”, என்றான் (லூக்கா 1:37). இன்று உங்கள் வாழ்வில் கூடாததை கூடப்பண்ண இம்மானுவேல் உங்களுடன் இருக்கிறார். இன்னும் சகரியாவை சந்தித்த தேவதூதன் “பயப்படாதே உன் வேண்டுதல் கேட்கப்பட்டது” என்றான் (லூக்கா 1:13). சகரியாவும், அவர் மனைவி எலிசபெத்தும் பிள்ளையில்லாதவர்களும், வயது முதிர்ந்தவர்களுமாய் இருந்தனர். யூதர்கள் பிள்ளையின்மையை சாபம் எனவும், பிள்ளையற்றோரை இழிவாகவும் நிந்தித்தனர். தேவனோ சகரியா எலிசபெத்துடன் கூட இருந்து அவர்களின் நிந்தையை நீக்கினார். யோவான் என்னும் ஒப்பற்ற தீர்க்கதரிசியை அவர்களுக்கு மகனாக தந்து ஆசீர்வதித்தார்.

இன்று நீங்கள் எதிர்நோக்கி இருக்கும் சவால் என்ன? அனுபவிக்கும் சிறுமை என்ன? அஞ்சுகிற நிந்தை தான் என்ன? பிரியமானவர்களே, பயப்படாதிருங்கள். “நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதும் இல்லை” என்று கர்த்தர்தாமே சொல்லியிருக்கிறபடியால், நாம் விசுவாசத்துடன், “நான் பயப்படேன்”, என்று அறிக்கையிட்டு தைரியமாய் இருக்கலாமே (எபிரெயர் 13:5,6)!

## நமது உதவியின்மைக்கு தேவனின் பதில்
## God's Answer to Our Helplessness

நமக்கு உதவிகரம் நீட்டவே நம் தேவன் இயேசு பூமிக்கு வந்தார் (எபி.2:16). அவர் மனிதராய் பூமியிலே வாழ்ந்து நம்மை போலவே துன்பங்களின் பாதையை கடந்து சென்றபடியால் நம்மைபுரிந்து கொண்டு நமக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார். “நான் உனக்கு சகாயம் பண்ணுவேன்” (ஏசாயா 41:10), “நான் உனக்கு துணை நிற்கிறேன்” (ஏசாயா 41:13) என்று நம் ஆண்டவர் வாக்குறுதி தருகிறார்.

மனிதன் தன்னிறைவு பெற்றவன் அல்ல, அவனுக்கு உதவி தேவை. குறிப்பாக தன் பாவங்களிலிருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொள்ள அவனால் முடியாது. அவன் செய்யும் பாவ பரிகாரங்கள் அவனை இரட்சிக்காது. இயேசு மட்டுமே பாவங்களை மன்னிக்கவும், பாவத்தினின்று நம்மை இரட்சிக்கவும் வல்லமை உடையவர். பாவிகளை இரட்சிக்கும்படியாகவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ.1:15). மனிதர்கள் அனைவருக்கும் மிக மிக அவசரமும், அவசியமான உதவி, பாவ மன்னிப்பும், விடுதலையும்தான். பிசாசின் தந்திரங்களை ஜெயிக்கவும், பாவ சோதனைகளை மேற்கொள்ளவும் இம்மானுவேல் நம்முடன் கூடவே இருந்து உதவி செய்கிறார் (எபிரெயர் 2:18).

நமது ஆண்டவருக்கு இன்னும் அநேக பெயர்கள் உண்டு. “அவர் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு” (ஏசாயா 9:6). நம் அனுதின வாழ்வில் நாம் பல தீர்மானங்கள் எடுக்க வேண்டி உள்ளது. இத்தருணங்களில் நமக்கு ஆலோசனை தரும் உதவியாளராக அவர் நம்முடன் இருக்கிறார் (சங்கீதம் 32:8). நம் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யும், நம்மை போஷிக்கும் நித்திய பிதாவாக அவர் நம்முடன் இருக்கிறார் (மத்தேயு 6:25-32). இக்கட்டு நேரங்களில் நமக்கு சமாதானம் அருளி உதவி செய்கிறார் (சங்கீதம் 29:11).

அன்புக்குரியவர்களே, திடன் கொள்ளுங்கள்! நம் உதவியற்ற நிலைமைக்கு பரிகாரியாய் வந்தவர் நம் இம்மானுவேல். "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத்தேயு 28:20). அவரையே நம்புங்கள், நேசியுங்கள்; தொடர்ந்து பற்றி கொள்ளுங்கள்; அவருடைய மகிமையான நாமத்தையும், அவர் மீது உள்ள விசுவாசத்தையும் அறிக்கையிடுங்கள். கர்த்தராகிய இம்மானுவேல் உங்கள் கூடவே இருந்து உங்களை ஆசீர்வதிப்பது நிச்சயம்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

## யோவான் சுவிசேஷத்தில் இயேசு
## PORTRAITS OF JESUS IN JOHN'S GALLERY

| | |
|---|---|
| தேவனுடைய வார்த்தை | – The Word of Go (யோவான் 1:1–18) |
| மனுஷ குமாரன் | – The Son of Man (யோவான் 2:1–11) |
| தெய்வீக போதகர் | – The Divine Teacher (யோவன் 3:1–21) |
| ஆத்தும ஆதாய வீரர் | – The Soul Winner (யோவான் 4:1–30) |
| உன்னத பரிகாரி | – The Great Physician (யோவான் 5:1–9) |
| ஜீவ அப்பம் | – The Bread of Life (யோவான் 6:22–35) |
| ஜீவதண்ணீர் ஊற்று | – The Fountain of Living Water (யோவான் 7:37–39) |
| இரக்கமுள்ள இரட்சகர் | – The Sympathetic Savior (யோவான் 8:1–11) |
| உலகத்தின் ஒளி | – The Light of the World (யோவான் 9:1–11) |
| நல்ல மேய்ப்பர் | – The Good Shepherd (யோவான் 10:1–16) |
| உயிர்த்தெழுதலும் ஜீவனும் | – The Resurrection and the Life (யோவான் 11:18–27) |
| ராஜா | – The King (யோவான் 12:12–19) |
| தாழ்மையுள்ள பணிவிடைக்காரன் | – The Humble Servant (யோவான் 13:1–20) |
| உற்சாகப்படுத்துபவர் | – The Great Encourager (யோவான் 14:1–31) |
| மெய்யான திராட்சை செடி | – The True Vine (யோவான் 15:1–11) |
| பெரிய ஈவு அளிப்பவர் | – The Great Gift Giver (யோவான் 16:7–15) |
| பிரதான ஆசாரியர் | – The Great High Priest (யோவான் 17:1–26) |
| பாடுபடுபவர் | – The Model Sufferer (யோவான் 18:1–14) |
| சிலுவையில் அறையப்பட்ட ராஜா | – The Crucified King (யோவான் 19:1–18) |
| உயிர்த்தெழுந்த மீட்பர் | – The Resurrected Redeemer (யோவான் 20:1–18) |
| விழுந்துபோனவர்களின் நண்பன் | – The Friend of the Fallen (யோவான்21:1) |

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை–625 016. போன் : 0452 4200664



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்


## Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


**நிறைவேறிக்கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் பாகம் :2** (...தொடர்ச்சி)

### 6. அறிவு பெருக்கம் (தானியேல் 12:4)

தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகால மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரை போடு. அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான் (தானியேல் 12:4).

நாம் வாழும் இந்தக் காலம் அறிவு மிகவும் பெருகி வருகின்ற காலம். எல்லாத் துறைகளிலும் பிரமிக்கத்தக்க அளவில் அறிவு பெருகி வருகிறது.

**போக்குவரத்து:** ஆதாம் காலம் முதல் சுமார் 6,000 ஆண்டுகளாக மனிதன் வேகமாக பயணம் செய்ய பயன்படுத்தியது குதிரைதான். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்புதான் மோட்டார் வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகாய விமானங்கள் 20ம் நூற்றாண்டின் மிக வேக வாகனமாகும். வெளிநாடுகளுக்கு செல்ல ஆகாய விமானங்கள் மணிக்கு சுமார் 1000 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கின்றன. சூப்பர்ஸானிக் விமானங்கள் மணிக்கு சுமார் 2200 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கின்றன.

வெளிகோளங்களுக்குச் செல்ல பயன்படுத்தப்படும் வாகனத்தை ***(Space Shuttle)*** மக்கள் பயணத்திற்கு பயன்படுத்த முடியுமா என்ற ஆராய்ச்சி வேகமாக நடந்து வருகிறது. இந்த முயற்சி வெற்றியடைந்தால் உலகில் எந்த நாட்டிற்கும் சுமார் 2 மணிநேரத்தில் போய் சேர்ந்துவிடலாம்.

**தகவல் தொடர்பு :** ஆதிநாட்களில் தோல் சுருட்களில் எழுதி, செய்திகளை ஆட்கள் மூலம் அனுப்பி வந்தனர். செய்திகளை எடுத்துச் செல்ல புத்தகங்களை பயன்படுத்தினர். கடந்த நூற்றாண்டின் நவீன தகவல் தொடர்பு மிகப்பெரிய வளர்ச்சியடைந்தது. கடிதங்கள் மூலம் தகவல்கள் அனுப்பப்பட்டு வந்தன. டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டது. டெலக்கிராம் புழக்கத்திற்கு வந்தது. பேக்ஸ் மிஷின் வந்தது. தற்போது செல்போன் அதிவேகமாக பரவி வருகிறது. உலகிலுள்ள எந்த நபருடனும் நொடிப்பொழுதில் தொடர்பு கொள்ளும் நிலை வந்துவிட்டது. ஒரு செல்போனில் பல சிம்கார்டுகளைப் பொருத்திவிட முடிகிறது.

**மீடியா :** தொலைக்காட்சிகள் பெரிதும் வளர்ந்துவிட்டன. கேபிள் டி.வி. மூலம் உலகில் எந்தப் பகுதியில் என்ன நடந்தாலும், உடனே அதை தொலைக்காட்சி மூலம் உடனே பார்க்கின்றோம்.

**இசைத்தட்டுகள்-மெமரிகார்டு :** சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு பாடல்களை கிராம போன் ரிக்கார்டுகளில் பதிவு செய்தார்கள். 5 நிமிட பாடலை சாப்பிடும் பிளேட் அளவிலுள்ள தட்டுகளில் பதிந்தார்கள். பின்பு ***L.P.***ரிக்கார்ட் வந்தது. அதில் 4 பாடல்களை பதிவு செய்தார்கள். ஆடியோ கேசட் வந்தபோது அது மக்களை விரைவாகக் கவர்ந்தது. பின்பு வீடியோ கேசட் வந்து மக்களை அதிசயிக்க வைத்தது. ***VCD, DVD,*** டிவிக்ஸ் ***(Divix)*** மெமரிகார்ட் என்று வந்து மக்களை பிரமிக்க வைத்துள்ளன. நூற்றுக்கணக்கான பாடல்களை ஒரு சிறிய மெமரிகார்டில் பதிவு செய்துவிட முடிகிறது.

**கேமராக்கள் :** பிலிம் போட்டு படம் எடுத்த காலம் மலையேறிவிட்டது. இப்போது படங்களை மெமரிகார்டுகளில் பதிவு செய்ய முடிகிறது.

**கம்ப்யூட்டர் :** கம்ப்யூட்டர் என்பது ஒரு பெரிய உலகத்தையே உள்ளடக்கியுள்ளது. இண்டர்நெட் மூலம் எந்த தகவல்களையும் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது. புஸ்தகங்கள் தேவையில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஐ.பேட், ஐ.போன் போன்றவை பிரமிக்கத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ளன.

**மருத்துவக்கலை :** ஆபரேஷன் பண்ணாமலேயே உடலுக்குள்ளிருக்கும் நோய்களை லேசர் பீம் மூலம் நவீனக்கருவிகளைப் பயன்படுத்தி சிகிச்சை செய்துவிடுகிறார்கள்.

இவ்விதமாக எல்லாத் துறைகளிலும் அறிவு பெருகிவிட்டது.

## 7. நோவா காலம் போல நடக்கும் காரியங்கள்

“மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு,

தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார், அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது” (ஆதியாகமம் 6:5,6).

“நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்” மத்தேயு 24:37-39

நோவாவின் நாட்களில் முழு உலகமுமே சீர்கெட்டநிலையில் இருந்தது. ஜனங்கள் உணர்வில்லாத வாழ்க்கை வாழ்ந்தனர். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள். இன்று எங்கு பார்த்தாலும் ஹோட்டல்கள். பசிக்காக புசிக்கின்றவர்களைவிட பொழுதுபோக்கிற்காக சாப்பிடும் கூட்டம்தான் அதிகம். பெருந்தீனிக்காரர்களாய் மாறிவிட்டனர். எங்கு பார்த்தாலும் குடி, வெறி. கோடி கோடியாய் குடிக்கு செலவு பண்ணப்படுகிறது.

### பெண் கொண்டார்கள், பெண் கொடுத்தார்கள்

திருமணங்களுக்காக கோடி கோடியாய் செலவு செய்கிறார்கள். ஆடம்பரமான திருமணங்கள் பெருகி வருகின்றன. பல நாட்கள் விருந்து நடக்கின்றன. கோடி கோடியாய் சீதனங்கள்.

இன்று நாளுக்கு நாள் உலகத்தில் அக்கிரமம் பெருகிக்கொண்டே வருகிறது. நோவா காலத்தில் முழு உலகத்தையும் தேவன் தண்ணீரால் அழித்தார். இனி முழு உலகமும் அணு ஆயுதங்களாய் உருவாகும். அக்கினியினால் அழிக்கப்படும்.

இன்று உலகில் எல்லா நாடுகளிலும் போராட்டங்களும், லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகின்றன. இந்தியாவும், அரசியல்வாதிகளின் ஊழலால் பயங்கர நிலையை அடைந்துள்ளது. எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் லஞ்சம் இருக்கிறது. லஞ்சம் கொடுக்காமல் வேலை நடக்காது. அரசியல்வாதிகளின் ஊழல் பணமெல்லாம் சுவிஸ் போன்ற நாட்டு வங்கிகளில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றங்கள் செயல்படாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன. நாட்டின் முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்த, ஆலோசிக்க வேண்டிய பாராளுமன்றம் ஊழலை ஒழிக்க லோக்பால் போன்ற கடினமான சட்டங்களை அமுல்படுத்த போராடுகிறது. இதில் எல்லாக் கட்சிகளுக்குமே பங்குண்டு என கூறப்படுகிறது. தேசத்தின் பொருளாதாரத்தையே சீர்குலைக்கும் அளவிற்கு ஊழலும், லஞ்சமும் கட்டுப்பாட்டை மீறிவிட்டது.

- தொடரும்



# கிறிஸ்துவிடைய பாடுகளின் ஐக்கியம்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்விதழில், கிறிஸ்துவுடைய பாடுகளின் ஐக்கியத்தைக் குறித்து தியானிப்போம். பாடுகள் என்றவுடன் நாம் பதறிப்போக வேண்டிய அவசியமில்லை. உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று சொன்ன ஆண்டவர், அவர் உலகத்தை ஜெயித்தபடியினால் நம்மை திடன்கொள்ள சொல்லுகிறார். அவர் ஜெயங்கொண்டது போல நாமும் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோமர் 8:37). ஆகவே பாடுகள் என்றவுடன் நாம் சோர்ந்து போக வேண்டியதில்லை. அவைகள் நம்மை உருவாக்குகின்றன. இயேசுவானவரே, குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று எபிரெயர் 5:8-ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவுடனே கூட மகிமைப்பட வேண்டுமானால், அவருடனேகூட பாடுபட வேண்டும் (ரோமர் 8:17).

என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்... இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந் திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன் (பிலி. 3:8-11) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை மாத்திரமல்ல, அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிகிறதற்கும் எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணுகிறார். எப்படியாயினும் தான் மரித்தோரிலிருந்து உயிரோடெழும்ப தகுதியாக வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாயிருந்தது. ஆகவே அவர் பாடுகளைப் பொருட்படுத்தவேயில்லை. அப்போஸ்தலனாகிய பவுலைப்போல பாடுகள் சகித்தவர்கள் அதிகமில்லை. ஆனாலும், இவைகள் எதுவும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:39) என்று கூறுகிறார். எந்தப் பாடுகளும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கக்கூடாது. அவரோடுகூடப் பாடுகளை சகித்தோமானால், அவரோடுகூட ஆளுகையும் செய்வோம் (2தீமோ.2:12). அவரோடுகூட ஆளுகை செய்யவேண்டுமானால், அவரோடுகூட பாடுகளையும் சகிக்க வேண்டும்.

தெசலோனிக்கேய சபையிலுள்ளவர்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆதி திருச்சபை மிகுந்த உபத்திரவத்தை சந்தித்தது. இருப்பினும் அவர்கள் சந்தோஷமாய் திருவசனத்தை ஏற்றுக்கொண்டதுமல்லாமல், அப்போஸ்தலர்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களுமானார்கள். இதினால் அவர்கள், மக்கெதொனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானார்கள். கர்த்தருடைய வசனம் அவர்கள் மூலமாய் பரம்பினது

மாத்திரமல்ல, தேவனைப் பற்றிய அவர்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று என்று பார்க்கிறோம். உபத்திரவமானது, சுவிசேஷம் அறிவித்தலையும், அவர்கள் விசுவாசத்தையும் சற்றேனும் பாதிக்கவில்லை. மற்ற விசுவாசிகளுக்கு மாதிரிகளானார்கள். நாமும் உபத்திரவத்தின் வழியாய் போகும்போது மற்றவர்களுக்கு மாதிரிகளாவோம். அவர்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள். நாம் மனந்திரும்பி இருக்கலாம். ஆனால் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருக்கிறோமா? மட்டுமல்ல, குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் (1 தெச.1:6-10). நாம் உபத்திரவங்களின் வழியாகப் போகும்போது தேவன் மேலுள்ள அன்பும் விசுவாசமும் குறையாமல் வேண்டும். அப்பொழுது நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரிகளாய் இருப்போம். தேவனுக்கு ஊழியஞ் செய்வதை விட்டுவிடக்கூடாது. கிறிஸ்துவின் வருகையை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அவர்களைவிட நாம் வருகைக்கு மிக மிக அருகில் இருக்கிறோம். இஸ்ரவேல் தேசத்தின் நிலைமையை பார்க்கும்போது இதை நாம் அறிந்து கொள்ளலாம்.

எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இயேசுவானவர் எடுத்துக் கொள்ளப்பட்டார். அப்படியே மறுபடியும் வருவார் (அப்போஸ்தலர் 1:11). எஜமானன் வரும்போது அவர் கொடுத்த வேலையை செய்துகொண்டே இருப்பவன் தான் உண்மையும் உத்தமுமான ஊழியன். பிலிப்பி பட்டணத்திலே பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை தெசலோனிக்கேயருக்கு சொல்லும்படி தேவனுக்குள் தைரியம் கொண்டிருந்ததாகப் பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார் (1 தெசலோனிக்கேயர் 2:2). நாமும் போராட்டங்கள், பாடுகள், நிந்தைகள் மத்தியிலும் தைரியமாய் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டேயிருக்க வேண்டும். உபத்திரவங்களினாலே தெசலோனிக்கேயர் அசைக்கப்படாதபடிக்கு அவர்களை திடப்படுத்தவும், அவர்கள் விசுவாசத்தைப்பற்றி அவர்களுக்கு புத்தி சொல்லவும், அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவை அனுப்புகிறார் (1 தெச.3:2). நம் திராணிக்கு மேலாக தேவன் நம்மை சோதிக்க மாட்டார். சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடுகூட அதற்கு தப்பிக்கொள்ளும் போக்கையும் அவர் உண்டாக்குவார் (1 கொரி. 10:13).

சோதனை, பாடுகளின் வழியாகப் போகும்போது, இரவும் பகலும் ஜெபிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (1 தெச.3:10). உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன் என்று யாக்கோபு அறிவுறுத்துகிறார் (யாக்கோபு 5:13). சோதனையைத் தாங்கிக் கொள்ளவும், அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கை அறிந்து கொள்ளவும், நாம் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவும், ஜெபம் அத்தியாவசியமாய் இருக்கின்றது. கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலி.1:29). கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நாம் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு பங்காளிகளானதால் நாம் சந்தோஷப்பட வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பேதுரு உற்சாகப்படுத்துகிறார் (1பேதுரு 4:12-16). நாம் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்களாயிருப்போம். தேவனுடைய மகிமையுள்ள ஆவியானவர் நம்மேல் தங்கியிருப்பார். நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களாலே அவர் தூஷிக்கப் படுகிறார். ஆனால் நம் மூலமாக மகிமைப்படுகிறார். நாம் கிறிஸ்தவர்களா யிருப்பதினால், பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். விழித்திருக்க வேண்டும். நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். உங்கள் சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே, விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று பேதுரு அறிவுறுத்துகிறார் (1 பேதுரு 5:8,9). நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவான் 5:4). நாம் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருப்போமானால், அந்த ராஜ்யத்திற்கு பாத்திரவான்கள் என்று எண்ணப்படுவோம். மாத்திரமல்ல தேவன் நியாயமான தீர்ப்புச் செய்வார். நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற நமக்கு இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுடைய நீதியாயிருக் கின்றது. கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது நீதியுள்ள தீர்ப்பை செலுத்துவார் (1தெச. 1:5-10).

துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறோம். விசுவாசத்தோடு உறுதியாய் நிலைத்திருப்போமானால், இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகும். நம்முடைய விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பையும் அடைவோம் (2தெச.1:5-10). நாம் பாவம் செய்யும்போது நமக்காக பரிந்துபேசுகிற இயேசுவானவர், நாம் பாடுபடும்போது, நமக்கு உதவி செய்கிறவராகவும், வேண்டுதல் செய்கிறவராகவும் இருக்கிறார் (எபிரெயர் 2:18). ஆகவே பாடுகள், வேதனைகள், உபத்திரவங்கள், போராட்டங்கள் வழியாக போகிற தேவ பிள்ளைகளே, திடன் கொள்ளுங்கள், ஜெபத்திலும் விசுவாசத்திலும் உறுதியாய் தரித்திருங்கள். நமக்காக வேண்டுதல்செய்து உதவி செய்கிறவர் நம்மோடு இருக்கிறார், நீதியாய் தீர்ப்புச் செய்கிற தேவனானவர் மகிமையாய் வெளிப்படும்போது, பிரதிபலனை அடைவீர்கள். ஆண்டவர் உங்களோடிருந்து உங்களை பெலப்படுத்துவாராக!

---

## கோலியாத்தும் சவுலும்

தாவீதிற்கு இரண்டு விதமான எதிரிகள் இருந்தனர். நாமும் நம்முடைய வாழ்வில் இரண்டு விதமான பிரச்சனைகளை சவால்களை சந்திக்க நேரிடும்.

**1.கோலியாத்:**கோலியாத் என்ற எதிரியை தாவீது ஒரே நாளில் முறியடித்தான். நம்முடைய வாழ்விலும் சில பிரச்சனைகளுக்கு, சவால்களுக்கு உடனடியாக தீர்வு, உடனடியாக அற்புதம் கிடைக்கும். காரியங்கள் துரிதமாக நடக்கும். அற்புதங்கள் எளிதில் நடக்கும்.

**2.சவுல்:**நம்முடைய வாழ்க்கையில் சில பிரச்சனைகளுக்கு, சவால்களுக்கு உடனடியான தீர்வு கிடைக்காமல் பல வருடங்களாக போராடி வருவோம். சில நேரங்களில் அந்த பிரச்சனையை எதிர்த்து போராடுவதற்கு பதில் அந்த பிரச்சனையுடன் வாழ பழகிக்கொள்வோம். அந்த பிரச்சனையில் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து சோர்ந்து போய்விடுவோம்.

நற்செய்தி என்னவெனில் சவுலும் ஒருநாள் வீழ்த்தப்படுவான்.

பிரச்சனைகளில் ஏன் இந்த வித்தியாசம்?

கோலியாத் போன்ற பிரச்சனைகள் நம்மை **உயர்த்துவதற்கு!**

சவுல் போன்ற பிரச்சனைகள் நம்மை **உருவாக்குவதற்கு!**



# எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம்

## புத்தக அறிமுகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

தங்கள் தீர்க்கதரிசன வார்த்தைகளைப் புத்தகவடிவில் தந்தவர்கள் மொத்தம் பதினாறு பேர் ஆவர். அவர்களில் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியோருடைய புத்தகங்கள் பெரியவை. எனவே இவர்கள் பெரிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்டனர். இக்கட்டுரையில் பெரிய தீர்க்கரில் ஒருவனாகிய எரேமியாவைப் பற்றிக் காண்போம்.

### இஸ்ரவேலரின் சரித்திரத்தில் எரேமியா:

சாலமோனின் நாட்களுக்குப்பின் (கிமு 931) இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிளவுற்றது. இதனை 1 இராஜாக்கள் 12ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இதில் பத்துக்கோத்திரங்கள் வடக்கு இராஜ்யம் (இஸ்ரவேல்) என்றும், யூதா, பென்யமீன் ஆகிய இரண்டு கோத்திரங்கள் தெற்கு இராஜ்யம் (யூதா) என்றும் அறியப்பட்டது.

வடக்கு இராஜ்யத்தில் யெரொபெயாம் முதல் ஓசெயா வரை (கிமு 931 முதல் 722 வரை) 19 இராஜாக்கள் ஆண்டு வந்தனர். இவர்கள் அனைவருமே கெட்ட இராஜாக்களாக இருந்தனர். ஜனங்களும் யெகோவா தேவனைவிட்டு கானானியரின் பிரதான தெய்வமாகிய பாகால் வழிபாட்டைப் பின்பற்றிச் சென்றனர். இதனால் தேவன் அவர்களை அசீரியாவுக்கு சிறையாக அனுப்பினார். இந்த விபரங்களை 1 இரா 12ம் அதிகாரம் முதல் 2இரா 17ம் அதிகாரம் வரையுள்ள வேத பகுதிகளில் காண்கிறோம்.

தெற்கு இராஜ்யத்தில் ரெகொபெயாம் முதல் சிதேக்கியா வரை (கிமு 931 முதல் 586 வரை) 20 இராஜாக்கள் ஆண்டு வந்தனர். இவர்களில் சிலர் நல்ல இராஜாக்களாயிருந்தனர். வடக்கு இராஜ்யம் செய்த விசுவாசத் துரோகச் செயலில் தெற்கு இராஜ்யமும் வீழ்ந்தது. இதனால் தேவன் அவர்களை கிமு 586-ல் பாபிலோனுக்குச் சிறைக்கைதிகளாக அனுப்பினார். இந்த சிறையிருப்பு மூன்று காலக்கட்டங்களாக நிறைவேறிற்று.

- கிமு 606ல் நேபுகாத்நேச்சார் முதலாவது எருசலேமுக்கு எதிராய் படையெடுத்து வந்தான். யோயாக்கீம் அரசனும், தானியேலும் அவனது நண்பர்களும், இன்னும் ஏராளம் மக்களும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர்.
- கிமு 597ம் ஆண்டில் இரண்டாவது முறையாக யூதாவுக்கு வந்து யோயாக்கீன் அரசனையும், எசேக்கியேல் தீர்க்கனையும், அவர்களுடன் பத்தாயிரம் பேரையும் பாபிலோனுக்குக் கொண்டு சென்றான்.
- கிமு 586ல் மூன்றாம் முறையாக நேபுகாத்நேச்சார் யூதாவுக்கு வந்து எருசலேம் தேவாலயத்தை இடித்து, மதில்களைச் சுட்டெரித்து, ஏழைகளான சிலரைத் தவிர மற்றெல்லாரையும் சிறையாகக் கொண்டு சென்றான்.

இந்த விபரங்களையெல்லாம் 2இரா 24,25 அதிகாரங்களில் வாசிக்கிறோம்.

தெற்கு இராஜ்யத்தின் கடைசி நாட்களில்தான் எரேமியா யூதாவில் ஊழியம் செய்தான். கிமு 626 முதல் 586 வரையுள்ள காலத்தில் யூதா முற்றிலும்

அழிக்கப்படும்வரை தனது தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்து வந்தான். பாபிலோனியரின் மூன்று படையெடுப்புகளையும் தன் கண்ணாரக் கண்டான். யூதா தேசமாகிய தெற்கு இராஜ்யத்தின் வீழ்ச்சியின் காலத்தில் தனது ஊழியத்தைச் செய்தபடியால் எரேமியாவின் புத்தகம் முழுவதும் சோகம் நிறைந்த செய்திகளாகவே காணப்படுகின்றன.

எரேமியாவின் நாற்பது ஆண்டுகால ஊழியத்தில் யூதாவின் கடைசி ஐந்து இராஜாக்களாகிய யோசியா, யோவாகாஸ், யோயாக்கீம், சிதேக்கியா ஆகியோர் யூதாவை ஆண்டு வந்தனர். இந்த ஐந்து இராஜாக்களின் ஆட்சிகால விபரங்களை 2இரா.22 முதல் 25 வரையுள்ள வேத பகுதிகளிலும், 2நாளா. 34 முதல் 36 வரையுள்ள வேத பகுதிகளிலும் வாசிக்கிறோம்.

யோசியா மொத்தம் முப்பத்தொரு வருஷங்கள் ஆட்சி செய்தான். அவனது ஆட்சியின் பதின்மூன்றாம் ஆண்டுமுதல் தனது தீர்க்கதரிசன ஊழியத்தை எரேமியா ஆரம்பித்தான். யோசியா கொண்டு வந்த மார்க்க எழுப்புதலுக்கு எரேமியா துணை நின்றாலும், அது மக்கள் மனதில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவரவில்லை என்பதே எரேமியாவின் கணிப்பு, ஏனென்றால் தேசம் ஒட்டு மொத்தமாக மனந்திரும்பவில்லை; மக்கள் உண்மையாக மனந்திரும்பாதபடியால்; பாபிலோனியரின் படையெடுப்புத் தடுத்து நிறுத்தப்படவில்லை என்ற வேதனைக் குரலிலேயே எரேமியா தனது வார்த்தைகளை எடுத்துரைத்தான்.

### எரேமியா கண்ணீரின் தீர்க்கதரிசி Jeremiah the Weeping Prophet

தனது உதவி ஊழியக்காரனாகிய பாரூக் என்பவனைக்கொண்டு எரேமியா இப்புத்தகத்தை எழுதினான் (எரே. 45:1).

எரேமியாவின் சொந்த ஊர் ஆனதோத். இவன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன். இவனுடைய தகப்பனுடைய பெயர் இல்க்கியா. தமது நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும், மீட்பின் செய்தியையும் அறிவிக்கும்படி தேவன் இவனை முன்குறித்து, அபிஷேகித்து, தீர்க்கதரிசியாக அழைத்தார் (எரே.1:5-10). கர்த்தர் இவனை அழைக்கும்போது 17வயது நிரம்பிய வாலிபனாயிருந்தான்.

கிமு 586ல் (2இரா.25ம் அதி) தெற்கு இராஜ்யமாகிய யூதா முற்றிலும் அழிக்கப்பட்டு, ஜனங்கள் பாபிலோனுக்கு சிறையிருப்பில் சென்றனர். இந்த அழிவுக்கு முன்பு இங்கு ஊழியம் செய்தவர்கள் ஏசாயா, மீகா, யோவேல், ஆபகூக், செப்பனியா, எரேமியா ஆகியோராவர். இவர்களில் எரேமியா கடைசியானவன். எருசலேமின் அழிவையும், ஜனங்கள் சிறைசென்றதையும் தன் கண்ணாரக் கண்டான். யூதாவின் அழிவுக்குமுன்பு நாற்பது ஆண்டு காலம் அவர்களுக்குத் தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகளை கண்ணீரோடு அறிவித்தான்.

கீழ்ப்படியாமை, விக்கிரக ஆராதனை, தேவனுக்கு விரோதமான கலகம் ஆகியவற்றினிமித்தம் தன் ஜனத்தின்மேல் வரவிருந்த அழிவையும், நியாயத்தீர்ப்பையும் தனது அகக்கண்களில் கண்ட எரேமியா அவர்களை மனந்திரும்பி யெகோவா தேவனிடம் வரும்படி கெஞ்சிக்கேட்டான்: ‘ஆ என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்’ (9:1) என்று எரேமியா கண்ணீருடன் சொல்லுவதை கவனியுங்கள்.

தேசம் அழிந்து, ஜனங்கள் சிறைப்பட்டுப் போகயிருப்பதால் உனக்கு மனைவியும் பிள்ளைகளும் வேண்டாம் என்று திருமணம் செய்யாமல் ஊழியம்

செய்யக் கர்த்தரால் பணிக்கப்பட்டான், (16:2). அவனுக்கு குடும்பமும் இல்லை; நண்பர்களும் இல்லை. தனிமையிலேயே வாழ்ந்து தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்தான். மிகவும் சீக்கிரமாய் வரவிருந்த கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் தீவிரத்தை அறிந்த எரேமியாவை துக்கவீட்டுக்கோ, விருந்து வீட்டுக்கோ செல்ல தேவன் அனுமதிக்கவில்லை, (16:2,5,8).

யோயாக்கீம், சிதேக்கியா ஆகிய அரசர்களின் காலத்தில் எரேமியா பட்டப்பாடுகளை எரேமியா 13,34,35 ஆகிய வேதபகுதிகளில் வாசித்தறியலாம்.

பஸ்கூர் என்பவன் அக்காலத்தில் கர்த்தருடைய ஆலயத்தில் விசாரணை செய்கிற ஆசாரியனாயிருந்தான். இவன் எரேமியாவை அடித்து, ஆலயத்தின் மேல்வாசலில் இருந்த காவலறையிலே போட்டான் (20:1-3). சிதேக்கியா ராஜாவின் கட்டளைப்படி காவற்சாலையின் முற்றத்திலிருந்த தண்ணீரில்லாத கிணற்றிலும் போட்டார்கள்; பட்டினி கிடந்து அங்கேயே செத்துவிடாதபடி மீண்டும் அவனை வெளியே தூக்கி எடுத்தனர் (38ம் அதி).

விக்கிரகங்களை வெறுத்துக் கர்த்தரிடம் திரும்புங்கள் என்ற எரேமியாவின் வார்த்தைகளுக்கு ஜனங்கள் கீழ்படியவில்லை. எனவே சிறையிருப்பு வரும் என்ற தீர்க்கதரிசனங்களைச் சொன்னான். பாபிலோன் ராஜாவுக்குச் செவிகொடுத்து, சிறையிருப்பில் செல்ல ஆயத்தமாகுங்கள் என்பது எரேமியாவின் பிந்தைய பிரதானச் செய்தியாயிருந்தது. 39ம் அதிகாரம் முதல் 45ம் அதிகாரம் வரையுள்ள பகுதியில் நேபுகாத்நேச்சாரின் படையெடுப்புக்குப்பின் தேசம் அழிந்துவிட்ட நிலையில், தேசத்தில் எஞ்சிவிடப்பட்டிருந்த யூதருடைய நிலைபற்றிய விபரங்களைப் பார்க்கிறோம்.

எரேமியாவின்மேல் பரிவுகாட்டி பாபிலோனுக்குச் செல்லவோ அல்லது தேசத்தில் எஞ்சியிருந்த மக்களுடன் யூதாவில் தங்கியிருக்கவோ நேபுகாத்நேச்சார் அவனுக்கு அனுமதியளித்தான். ஆனால் தேசத்தில் மீதியாய் விடப்பட்டிருந்த யூதர் எகிப்துக்கு ஓடிப்போக விரும்பினர். எகிப்துக்கு போக வேண்டாம் என்று எரேமியா தடுத்தான். ஆனால் மக்களின் கரம் ஓங்கியபடியால் அவர்கள் எரேமியாவை இழுத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிச்சென்றனர்.

எகிப்திலும், கர்த்தர் தனக்குச் சொன்னபடி யூதா ஜனங்கள் பாபிலோன் ராஜாவை சேவிப்பதே தேவதிட்டம் என்று எரேமியா பிரசங்கித்தான். எனவே, அவர்கள் அவனைக் கல்லெறிந்து கொன்றுபோட்டனர் என்று பாரம்பரியம் சொல்லுகிறது (43ம் அதி).

**எரேமியாவின் தீர்க்கதரிசன செய்திகள்:**

- விக்கிரக ஆராதனை, கீழ்படியாமை ஆகியவற்றிலிருந்து மக்கள் மனந்திரும்ப வேண்டும் என்று பிரசங்கித்தான்.
- இந்த செய்திக்கு ஜனங்கள் கீழ்படியாதபோது, நியாயத்தீர்ப்பு வரும் என்றும் தேசத்தில் அழிவும் சிறையிருப்பும் வரும் என்றும் அதற்கு அடுத்தபடியாக பிரசங்கித்தான்.
- சிறையிருப்பு உறுதியெனக் கண்டபோது, தேவதிட்டத்துக்கு எதிர்த்து நிற்காமல் பாபிலோனுக்குச் சென்று கர்த்தரின் தண்டனையை அனுபவியுங்கள். அதுவே உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்றும் பிரசங்கித்தான்.
- சிறையிருப்பின் தண்டனையாகிய 70 ஆண்டுகளுக்குப்பின் (25:10), தேவன் கிருபையாய் அவர்களைத் திரும்பக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையின் செய்தியையும் எரேமியா அறிவித்தான்.

**எரேமியாவின் செய்திகளை மூன்று காலக்கட்டங்களாகப் பிரித்துப் படிக்கலாம்:**

**1. எரேமியாவின் வாழ்நாள் காலத்திலேயே நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்**

- 16:9 யூதாவில் சந்தோஷத்தின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும் ஓய்ந்துபோகும்.
- 20:4 யூதா அனைத்தையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்.
- 25:1-14 இந்த தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ எழுபது வருஷமாக பாபிலோன் ராஜாவை சேவிப்பார்கள்.
- 27:19-22 தேசத்திலும், ஆலயத்திலுமிருந்து பணிமூட்டுகள் அனைத்தும் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும்.
- 28:15-17 கள்ளத்தீர்க்கதரிசியாகிய அனனியா சாவான்.
- 32:10-13,28 இந்த நகரத்தை நேபுகாத்நேச்சார் பிடிப்பான்.
- 34:1-5 தேசம் முறியடிக்கப்படும்போது சிதேக்கியா பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டாலும் பட்டயத்தால் சாகாமல், சமாதானத்துடன் மரிப்பான்.

மேற்கண்ட யாவும் எரேமியாவின் வாழ்நாள் காலத்திலேயே நிறைவேறிய தீர்க்கதரிசனங்களாகும்.

**2. மிக நீண்டதூர எதிர்காலத்துக்குரிய தீர்க்கதரிசனங்கள்**

- 23:5,6 மேசியா நீதியுள்ள கிளையாய் (Jehovah-Tshidkenu) தோன்றுவார். இதன்படி எரேமியாவின் காலத்திலிருந்து 600 ஆண்டுகளுக்குப்பின் மேசியாவாகிய இயேசு நீதியின் கிளையாய் தோன்றினார்.

**3.இன்னும் நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள்; (ஆனால் அவை நிச்சயமாய் நிறைவேறும்)**

- 30:8,9 அந்நியர் இனி அவனை அடிமைகொள்ளுவதில்லை. யூதர் கர்த்தரை மட்டுமே சேவிக்கும் காலம் வரும்.
- 31:31-34 கர்த்தர் புதிய உடன்படிக்கையை இஸ்ரவேல் ஜனங்களுடன் ஏற்படுத்துவார்.

**நம்மைக் கவர்ந்திழுக்கும் தீர்க்கதரிசன புத்தகம்:**

- நமது வேதாகமத்தில் சங்கீத புத்தகத்திற்கு அடுத்து பெரிய புத்தகம் இதுவே.
- பழைய ஏற்பாட்டு தீர்க்கரில் எரேமியாவின் பாடுகளையும், சோகத்தையும் போல வேறெந்த தீர்க்கதரிசியும் பாடு அனுபவிக்கவில்லை.
- ஏசாயா தனது கடினமான தீர்க்கதரிசன வார்த்தைகளை எழுதும்போது தனது பேனாவை நெருப்பில் முக்கி எழுதினான் என்றால், எரேமியா தனது வார்த்தைகளை கண்ணீரில் முக்கி எழுதினான் என்று காண்கிறோம். அதாவது, கடினமான தனது வார்த்தைகளை கண்ணீருடன் எடுத்துரைத்தான்.
- "பின்மாற்றத்துக்கும் விசுவாசத்துரோகத்துக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தப்பாமல் வரும்" என்ற சத்தியம் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டுள்ளது.
- உள்ளான சமயம், தனியார் சமயம், புதிய உடன்படிக்கை என்னும் புதிய உபதேசத்தை அழியப்போகும் தேசமக்களுக்கு ஆழமாக எடுத்துரைத்தான்.

உள்ளான சமயம், தனியார் சமயம், புதிய உடன்படிக்கை என்ற மூன்று அடிப்படை உபதேசங்களை சிறையிருப்பில் சென்ற யூதாவின் மக்களுக்கு எரேமியா உபதேசித்தான்.

❖ தேவாலயம் சார்ந்த யூதரின் மார்க்க நம்பிக்கை தேவாலயம் அழிக்கப்படும் போது அழிந்துபோகும், தேவபயமும், ஆசாரியர்களும், பலிமுறைகளும், எருசலேமும் அழிந்துபோனாலும் மக்கள் தங்கள் இருதயத்தில் தேவனை இருத்திக்கொள்ள வேண்டும் என்பது எரேமியா போதித்த உள்ளான சமயம் (3:17; 4:14; 7:14; 19:6,10).

❖ கூட்டுக்குடும்ப வாழ்க்கை வாழ்ந்த யூதா தேச மக்கள் சிறைப்பட்டுப்போகும் போது எங்கெங்கோ சிதறடிக்கப்பட்டுச் செல்வர்; எனவே அவனவன் தனிப்பட்ட முறையில் கர்த்தருடன் உறவை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற தனியார் சமயத்தை எரேமியா கற்பித்தான், (31:34). தாய்ப்போல பிள்ளை, நூல்போல சேலை என்றில்லாமல், தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு என்ற புதிய உபதேசத்தைத் தந்தான். அவனவன் பாவத்துக்கு அவனவனே பொறுப்பு என்ற தனிமனித மார்க்க கடமைகளை அறிவுறுத்துகிறான்.

❖ பழைய உடன்படிக்கை சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் ஆதார ஏதுக்கள் பலிகளும், காணிக்கைகளும், தேவாலயமுமே. இவை அனைத்தும் பாபிலோனிய சிறையிருப்பில் இல்லாமல்போகும். எனவே இருதயத்திலும் உள்ளத்திலும் எழுதப்பட்டு தனி நபருக்கு தரப்படும் புதிய உடன்படிக்கையை எரேமியா தன் புத்தகத்தில் அறிமுகப்படுத்துகிறான். இதில் பிரதானமாக திருக்குள்ள இருதயத்தைச் சரிசெய்து யூதாவின் மக்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதை அழுத்திச்சொல்வது முற்றிலும் புதிய ஏற்பாட்டின் “மனந்திரும்புதல்” உபதேசத்துக்கு ஒத்திருக்கிறது.

**எரேமியா புத்தகத்தின் பொருளடக்கம்:**

எரேமியாவின் புத்தகம் காலக்கிரமத்தின்படியோ, சம்பவக்கிரமத்தின்படியோ தொகுத்துத் தரப்படவில்லை. கீழ்காணும் ஏழு எளிய குறிப்புகளில் அதிலுள்ள 52 அதிகாரத்தையும் பகுத்து படித்திட பலன் கிடைக்கும்.

1. எரேமியாவின் ஊழிய அழைப்பு, (1ம் அதி)
2. யூதாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமான தீர்க்கதரிசன வார்த்தைகள், (1-25 அதி).
3. எரேமியாவின் வார்த்தைகளை மக்கள் நிராகரித்தல், (26-28 அதி).
4. மனந்திரும்புவோருக்கு தேவனுடைய மீட்பு உண்டு என்ற செய்தி, (29-35 அதி).
5. எரேமியாவின் வார்த்தைகள் பின்னும் நிராகரிக்கப்படுதல்; எருசலேமின் வீழ்ச்சி, (36-45 அதி).
6. புறஜாதிய தேசங்களுக்கு எதிரான தேவகோபம் பற்றிய போதனை, (46-51 அதி).
7. பாபிலோனியர் வந்து எருசலேமை பிடித்து அழித்தல் - ஒரு சரித்திரக்குறிப்பு, (52ம் அதி).

கர்த்தருடைய ஊழியத்தை பாடுகள் மத்தியிலும் பாரத்தோடு செய்பவனே உண்மை ஊழியன் என்பதற்கு எரேமியா நமக்கு நல்ல முன்மாதிரி. எரேமியாவின் நல்ல மாதிரியைப் பின்பற்றி வெற்றிபெற தேவன் கிருபை செய்வாராக.





# வேலை ஸ்தலத்தில் பிறருக்கு ஆசீர்வாதமாய் இருப்பதற்கு - 7D

Rev. J.ஜேம்ஸ் வில்லிங்சன்
Regional Overseer, Senior Pastor, Kovai City AG Church

## 1. Divine Vision – தெய்வீக தரிசனம்

நீங்கள் உலகத்திற்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள். உங்கள் வேலை ஸ்தலத்தில் தேவன் உங்களைத் தவிர்க்கப்படமுடியாத முக்கிய நபராக வைத்திருக்கிறார். உங்கள் வேலையை, தொழிலை தேவன் விரும்பும் வகையில் செய்ய தேவனிடம் அதற்கான வரைபடம், திட்டம், தரிசனம் இருக்கிறது. இன்னும் 10 வருடங்களில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களைக் கொண்டு தேவன் என்ன செய்து முடிக்கப் போகிறார்? உங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன? எதற்காகப் பிடிக்கப்பட்டிருக்கிறீர்கள்? நாம் செய்யும்படி நியமிக்கப்பட்டதான செயல்களை அறிந்து அதை நிறைவேற்றப் போராட வேண்டும். அதற்காக வாழ, முன்னேற, ஆசையாய் தொடர, நேரத்தை, தாலந்தை செலவழிக்கத் தீர்மானிக்க வேண்டும்.

## 2.Divine Strategy – தெய்வீக யுக்தி

உங்கள் தொழிலில் மூத்த பங்காளர் அல்லது நிர்வாக இயக்குனர் தேவனே. நீங்கள் தனியாகச் செய்யவில்லை. தேவனோடு இணைந்து திட்டங்களையும், யோசனைகளையும், தருபவரைக் கேட்டுக் காரியங்களைச் செய்யவேண்டும். யோசுவா ஒவ்வொரு யுத்தத்தை நடத்தும்போதும், ஒரு தெய்வீகத் திட்டத்தைத் தேவனிடம் கேட்டு, அதன்படி யுத்தம் செய்தபோது ஜெயம் கிடைத்தது. இதைப்போலவே இராமுழுவதும் மீன் பிடித்தும், ஒரு மீனும் அகப்படாதபோது, பேதுரு ஒரு தெய்வீகத் திட்டத்தின்படி வலையை வீசினபோது, வலை கிழியத்தக்கதாகத் திரளான மீன்களைப் பிடித்தார். ஒவ்வொரு நாளும் வேதத்தைத் தியானம்பண்ணும்போது, தேவன் தெய்வீகத் திட்டங்களைத் தருவார். அதன்படி வேலை செய்யும்போது நாம் செய்யும் காரியங்கள் வாழ்நாள் சாதனையாக மாறும் (Life time Achievement).

## 3.Divine Enablement – தெய்வீக ஆற்றல்

தேவன் தந்த வேலை, தொழில், வியாபாரம் இவைகளைச் செய்யத் திறமைகளையும், தாலந்துகளையும், இயற்கையாகவே தந்துள்ளார். நம்மைக் குறித்த தேவ திட்டம் அவைகளின் தொகை கடற்கரை மணலைப் பார்க்கிலும் அதிகம். ஒரு DNA வில் உள்ள தகவல்களை 4500 புத்தகங்களில் அடக்கலாம். மனித மூளையின் திறன் அபாரசக்தி கொண்டது. இதை முழுமையாக 0.05% தான் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதுவும் அல்லாமல் ஒரு விசுவாசிக்குப் பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த ஞானத்தையும், விவேகத்தையும் தருகிறார். பெசலெயேலைப் பரிசுத்த ஆவியானவர் ஞானத்தினால் நிரப்பி, ஆசரிப்புக் கூடாரத்தில் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், உலோகத்திலும், மரத்திலும், சித்திர வேலையையும் யூகித்துச் செய்ய, எந்த முன் அனுபவமும் இல்லாமல் தேவன் பயன்படுத்தினார்.

ஒவ்வொரு விசுவாசியும், சபையில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தைச் செய்யும்போது உங்கள் வேலையில் யாரும் செய்யாத புதிய காரியங்களையும், மற்றவர்கள் ஆச்சரியப்படக்கூடிய அதிசயமான காரியங்களையும், பரிசுத்த ஆவியினால் செய்ய முடியும். எதிர்கால (Futuristic) தேவைகளின் அடிப்படையில், கடினமான காரியங்களுக்குத் தீர்வுகள் காண முடியும்.

## 4.Dedication – அர்ப்பணிப்பு

உங்கள் வேலையை நேசித்து அர்ப்பணத்தோடு செய்து அதன்மூலம் தேவநாமம் மகிமைப்படும் என்றால், அதுவும் தேவனுக்கு ஆராதனையே. செய்யும்படி உன் கைக்கு நேரிட்டதை முழு பலத்தோடு செய் (பிரசங்கி 9:10). கர்த்தர் யோசேப்போடு இருந்தார், அவன் காரியசித்தி உள்ளவனாக இருந்தான். நாமும் எந்த வேலையைச் செய்தாலும், நேர்த்தியாக (Excellent), யாரும் செய்ய முடியாத, குறை கண்டுபிடிக்க முடியாத, நிலையில் நிகரற்ற செயல்களைச் செய்ய வேண்டும்.

தாவீது, ஒரு ஆட்டிற்காக ஜீவனையும் கொடுக்க சிங்கத்தோடும் கரடியோடும் போராடி ஜெயித்ததுபோல, நாமும் அர்ப்பணத்தோடு செய்ய வேண்டும். காரியத்தை முடிக்கும் வரையில் நெகேமியாவைப் போல முயன்று நிற்க வேண்டும். தேறினவர்களாக இருக்க வேண்டும் (Perfection)

## 5.Divine Influence – தெய்வீகச் செல்வாக்கு

தேவனோடுள்ள உறவு, தனி ஜெபம், வேத தியானம், ஆராதனை, தேவ தயவையும் மனிதர் தயவையும் பெற்றுத்தரும். எஸ்தர், தான் காண்கிற எல்லோரிடத்திலும் தயவு பெற்றிருந்தாள். உங்கள் வேலைகளில் உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி (Boss attitude) கடினமாக வேலை வாங்க அவசியம் இல்லை. தெய்வீகச் செல்வாக்கு இருக்குமானால், போவாஸ் வயலில் வேலை செய்தவர்களைப் போல, சந்தோஷமாய், உற்சாகமாய் வேலை செய்வார்கள். உங்களுக்குரிய மரியாதையையும், கனத்தையும், உங்களுக்குக் கீழே வேலை செய்கிறவர்கள் தருவார்கள். எல்லா நேரங்களிலும் மற்றவர்களைக் கட்ட, உருவாக்க, உற்சாகப்படுத்த, அங்கீகரிக்க, உங்களை அர்ப்பணியுங்கள். நம்முடைய அர்ப்பணம் மற்றவர்களையும் அர்ப்பணத்திற்குள் வழிநடத்தும்.

## 6.Demonstrating Kingdom Life Style – தேவராஜ்யத்தின் வாழ்க்கைமுறையை வெளிப்படுத்துதல்

தேவ ராஜ்யத்தின் சிந்தையோடு நீதியாய் காரியங்களை நடப்பிக்க வேண்டும். வேதத்தின் அறநெறியில (Ethics) வேலை செய்யும்போது, சில நேரங்களில் கஷ்டங்கள் வரலாம். மற்றவர்களால் பகைக்கப்படலாம். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதமடைவான். உடனடியாக கிடைக்காவிட்டாலும் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்துவார். செல்வம், கனம், மேன்மை, வெற்றி எல்லாம் தேவனிடத்தில் இருந்து வருகிறது. தானியேல் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் நான்கு ராஜாக்களின் காலங்களிலும் உயர்வுக்கு மேல் உயர்வு பெற்றுக் கொண்டான் (தானியேல் 6:3,4).

## 7.Divine Demonstration – தெய்வீக வெளிப்பாடு

தேவனுடைய ஞானம் உலகத்திற்கு சபையின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. குழப்பத்தில், ஆலோசனை இல்லாமல், தீர்க்க முடியாத பிரச்சனைகளோடு இருக்கிற உலகத்தில், தேவன் யோசேப்பைப் போல நம்மையும் பெரிய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண அழைக்கிறார். தேவன் மனிதனை ஆளுகைசெய்ய சிருஷ்டித்தார். அபிஷேகம் ஆளுகை செய்வதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. தேவ ஞானத்தை, வல்லமையை, ஆச்சரியமான கிரியைகளை, நம் மூலம் செய்ய விரும்புகிறார். தேவன் நம்மோடு இருப்பதை இந்த உலகிற்கு நம்முடைய வேலைத்திறமையின் மூலமே வெளிப்படுத்த வேண்டும். வேலை செய்கிற இடங்களில் அற்புதங்களைக் காண முடியும். வேலை ஸ்தலத்தில் மிகப்பெரிய வெற்றியைக்காண, தேவஆலோசனையின்படித் தீர்மானம் எடுத்தால், கடினமான வேலைகளையும் சந்தோஷமாக, பதற்றமில்லாமல் (Relax), குழப்பமான சூழ்நிலை மத்தியிலும் தீர்வு கொடுக்க (Problem Solving) முடியும்.

## சபை அங்கத்தினர்களின் தீர்மானங்கள்

1. குடும்பத்துடன் வாரவாரம் ஆலயத்திற்குச் செல்ல தீர்மானிக்கிறேன். தாமதமாக செல்லமாட்டேன். ஆராதனை முடியும் முன்பு எழுந்து வரமாட்டேன். நானோ அல்லது என் குடும்ப அங்கத்தினரில் எவருமோ ஆராதனையின்போது யாருக்கும் கவனத்தைச் சிதறச் செய்கிறவர்களாயிருக்க மாட்டோம்.

2. பிரசங்கத்தைக் கவனித்துப் குறிப்பெடுக்கத் தீர்மானிக்கிறேன். அதை வீட்டில் படித்து நல்ல கருத்துக்களை ஏற்ற சமயத்தில் பிறரோடு பகிர்ந்து கொள்வேன். பிரசங்கத்தை முதலாவது எனக்கென்றே எடுத்துக் கொள்வேன்.

3. சபையின் தலைமைக்குப் பணிந்து நடக்கத் தீர்மானிக்கிறேன். எளிய மனதுடன் திருத்தங்களை ஏற்றுக்கொள்வேன். தலைவர்களைப் புறங்கூற மாட்டேன், மதிப்பேன். என் பிரச்சனைகளுக்கு அவர்கள் உதவியை நாடுவேன்.

4. சபையின் உடன் அங்கத்தினருக்கு முன்மாதிரியாயிருக்கத் தீர்மானிக்கிறேன். என் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் கவனமாயிருப்பேன். எல்லாவற்றிலும் பரிசுத்தமாய் நடந்து கொள்வேன்.

5. சபையில் உற்சாகமாய் பங்கேற்கும் அங்கத்தினராயிருக்க தீர்மானிக்கிறேன். சபையின் ஊழியங்களில் கூடுமான அளவு பங்கெடுக்கத் தீர்மானிக்கிறேன். மாதத்தில் குறைந்தது ஓர் ஆத்துமாவையாவது ஆதாயப்படுத்த முயற்சி எடுப்பேன். தாராளமாக கொடுப்பேன்.

6. என் சபைக்காக ஊக்கமாகவும், ஒழுங்காகவும் ஜெபிப்பேன். மேய்ப்பருக்காக, அங்கத்தினருக்காக ஜெபிப்பேன். சபையின் ஊழியங்களுக்காகவும் சபையின் எழுப்புதலுக்காகவும் மன்றாடுவேன்.

7. சபையின் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய உதவியாயிருக்கத் தீர்மானிக்கிறேன். அவர்களது பாவங்களை சுட்டிக்காட்ட தயங்காமல், பயப்படாமல் தனிமையில் அதைக் குறித்து ஜெபத்தோடும் அன்போடும் பேசுவேன்.

8. தேவையிலுள்ள சபை அங்கத்தினருக்கு உதவிகளையும் பொருளுதவிகளையும் செய்ய தீர்மானிக்கிறேன். அவர்களுக்கு தியாகம் செய்ய தயங்கமாட்டேன்.



9. பிற சபையின் அங்கத்தினரோடு அன்போடு பழகத் தீர்மானிக்கிறேன். புன்முறுவலோடும் அவர்களை வாழ்த்துவேன். அவர்களோடு ஐக்கியம் கொள்ள தயங்க மாட்டேன்.

10. ஆவிக்குரிய சிறப்புக் கூட்டங்கள், புத்தகங்கள், பத்திரிக்கைகள் ஆகியவை மூலம் என் ஆன்மீக வாழ்வை வளர்த்துக்கொள்ள தீர்மானிக்கிறேன். கற்றுக்கொள்ளும் சத்தியங்களை வேதாகமத்தில் ஆராய்ந்து அறிவேன். தவறான உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருப்பேன்.

Dr. லில்லியன்



# பூமியின் எல்லைகளை சொந்தமாக நமக்குத் தரும் தேவன்

Rev.A. எட்வின் பிரபாகர்

இயக்குநர் - வடகிழக்கு மிஷன் இலாக்கா ஊழியங்கள்

பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் பிரதேச மிஷன் ஊழியங்கள் சார்பாக அன்பின் வாழ்த்துக்கள். வருடத்தின் கடைசி பகுதியில் வந்திருக்கிறோம். கிறிஸ்துவின் வருகையை நெருங்கி எதிர்நோக்கி காத்திருக்கிறோம். நமது காலத்தில் வருகைக்கு முன் சுதந்தரிக்க வேண்டியவைகளை நாம் தீவிரமாய் செயல்பட்டு செய்து முடிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அதற்காக தேவன் தந்த பாரத்தை இச்செய்தியில் பகிர்ந்து கொள்கிறேன்.

**1. பூமியின் எல்லைகளை சொந்தமாக தரும் தேவன் (சங்கீதம் 2:8)**

நம்முடைய தேவன் எப்படிப்பட்டவர் என்பதை வேதவசனங்கள் மூலம் அறிந்து விசுவாசித்து அனுபவித்து வருகிறோம். தேவன் எப்படிப்பட்டவர் என்பதில் ஒன்று, பூமியின் எல்லைகளை நமக்கு சொந்தமாக தருகிறார் என்று வேதம் தெளிவாய் நமக்கு சொல்கிறது. பூமியை மனித குடியிருப்புக்காக சிருஷ்டித்தார் (ஏசாயா 45:18). இன்று பூமியில் இயேசுவை அறியாத நிலையில் பெரும் கூட்டம் ஜீவித்து வருகிறதைப் பார்க்கிறோம். இதில் ஒரு ஆத்துமா கெட்டுப்போவதை தேவன் விரும்பவில்லை என்பதை அறிந்திருக்கிறோம். அப்படியிருக்க தேவனின் வார்த்தை சொல்லுகிறபடியே பூமியின் எல்லைகளை நமக்கு சொந்தமாக தருவேன் என்று எழுதியிருக்கிறபடியே தேவன் செய்வார் என்பதை விசுவாசித்தால் அது தேவனால் கூடும் என்பதை அனைவருக்கும் அறிவிக்கிறேன். நமது பாரத தேசமும் கிறிஸ்துவை அறிந்து, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஜனங்களால் நிறைந்திருக்கும் தேசமாக மாற்றி தருவார் என்பதையும் விசுவாசிப்போம்! சுதந்தரிப்போம்! தேசம் கர்த்தருடையதாய் மாறுவதாக, தேசத்தை சுதந்தரிக்க நாம் செய்ய வேண்டிய மூன்று காரியங்களை கீழே சுட்டிக்காட்டுகிறேன்.

**2. (A). ஜெபத்தினால் பூமியின் எல்லைகளை சொந்தமாக தேவன் தருகிறார்**

சங்கீதம் 2:8-ன் ஆரம்ப பகுதி அதை நமக்கு சுட்டிக்காட்டுகிறது. "என்னைக் கேளும்" என்ற சொற்றொடரை கவனிக்க கேட்கிறேன். சபை, விசுவாச மக்கள் இன்றும் அதிகமாய் ஜெபித்தால் இதுவரை நடைபெறாத அசாத்தியமான ஆத்தும அறுவடை, மிகப்பெரிய மீட்பின் எழுப்புதலைத் தர தேவன் ஆயத்தமாயிருக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் சுமார் 120 பேர் ஒருமனப்பட்டு 10 நாட்கள் ஜெபத்தில் இருந்தபோது இறங்கிவந்து அபிஷேகித்த ஆவியானவர், அதில் அப்போஸ்தலனாகிய பேதுருவின் 3000, 5000 என்று ஜெபத்தோடு கூடிய பிரசங்கம் கேட்டு இரட்சிக்கப்பட்டதுபோல ஆத்துமாக்களை இரட்சித்து இந்தியாவை சந்திக்க இயேசு கிறிஸ்து வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில், கேளுங்கள், கொடுக்கப்படும்; கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான் என்றும் சொல்லியிருக்கிறதே. ஜெபிப்போம், செயல்படுவோம், பூமியின் எல்லைகளை நமக்கு சொந்தமாக தருவார். இந்திய தேசமும் அவருக்கு சொந்தமாக மாறும்!

சங்கீதம் 22:24,27 தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனை கேட்டருளினார். பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும். ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும் என்ற வார்த்தை நிறைவேறும் தேசம் அவருடையதாக மாறும்.

**(B).நடந்து திரிந்து சந்திக்கப்படாதோரை தேடிச்சென்றால் பூமியின் எல்லைகளை சொந்தமாக தேவன் தருகிறார்**

ஆதி.13:17-ல் தேவன் ஆபிரகாமை பார்த்து, நீ எழுந்து தேசத்தின் நீளமும், அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி, அதை உனக்கு தருவேன் என்றார். எப்படி நடந்து திரிவது? ஆத்தும பார தரிசனத்தோடு ஆதி.13:14,15-ல் உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்தில் இருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் உனக்கும், உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கிறபடி கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறாரே.

தேவன் ஆபிரகாமுக்கு சொன்ன தமது வார்த்தையில் எத்தனை உண்மையுள்ளவர்!. தேசத்தில் அழியும் ஜனங்களைக் குறித்து பாரம், தரிசனத்தோடு நாம் தேசம் முழுவதும் ஊடுருவிச்சென்று நடந்து செயல்பட்டால் பூமியின் எல்லைகளை உனக்கு சொந்தமாக தருவேன் என்றவர் நிச்சயம் தருவார். இமயம் முதல் குமரிவரை தேச ஜனம் நடந்து திரிந்து மெய் தெய்வத்தை தேடி அலைந்து கொண்டிருக்கிறாரே! அவர்களை தேடி நாம் நடந்து திரிந்து செயல்பட்டால் நிச்சயம் தேசத்தின் ஜனங்களை நமக்குத் தருவார். தேவன் நம்மை பெலப்படுத்தி பயன்படுத்துவாராக!

**(C).சுவிசேஷத்தை அறிவித்தால் பூமியின் எல்லைகளை சொந்தமாக தேவன் தருகிறார்**

ரோமர் 10:14,15-ல் பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. மேற்கண்ட வசனத்தின்படி சகல ஜனங்களுக்கும் நாம் சுவிசேஷத்தை அறிவித்தால் நிச்சயம் கிறிஸ்துவை விசுவாசிப்பார்கள் என்பது திண்ணம். இன்றைய சபைகளில் கிறிஸ்துவின் சுவிசேஷமே ஜனங்களை இரட்சித்து விசுவாச ஜனமாய் மாற்றியது என்பதை அறிந்திருக்கிறோமே. இந்தியாவில் முழுநேர ஊழியர்களும், சகல விசுவாச மக்களும் அறிவிக்க ஆரம்பித்து விட்டால் மிகப்பெரிய இரட்சிப்பும், எழுப்புதலும், தேசமே மறுரூபப்படும் என்பது சத்தியமாக உண்மை. சுவிசேஷ பாரம் நமக்குள் வரட்டும். பாரத்தோடு எழுந்து செயல்படுவோம்! பூமியின் எல்லைகளை சொந்தமாக தேவன் தருவார். நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்! தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!!

**சாத்தானின் சதிகளை தகர்த்திடுவோம்**
**இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்**
**இந்தப்பார் முழுவதும் இயேசு நாமத்தையே**
**எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்**
**நம் இயேசு ராஜாவே இதோ வேகம் வாராரே**
**அதி வேகமாய் செயல்படுவோம்**



# “சாவாமை” போதனையின் தவறு!

(யோவான் 11:25-26ன் சரியான விளக்கம்)


**Rev.R.மதன்ராஜ்**

ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி

Contributing Editor, Paripoorana Jeevan


சமீப நாட்களில், சரீரப்பிரகாரமான மரணத்தையே நாம் சந்திக்கவேண்டியதில்லை என்ற ஒரு போதனை வலம் வந்ததை நாம் அறிந்திருக்கக்கூடும். இந்த போதனையை முன்வைப்பவர்கள், சில குறிப்பிட்ட வசனங்களை (யோவான் 11:25-26; 2 தீமோத்தேயு 1:10; யோவான் 6:57-58; ரோமர் 8:11; எபிரெயர் 2:14) தங்களுடைய போதனைக்கு சாதகமாய் பயன்படுத்துகின்றனர். அதில் யோவான் 11:25-26 முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த வேதப்பகுதியின் தெளிவான விளக்கத்தை இக்கட்டுரையில் விவாதிப்போம்.

### யோவான் 11:25-26

இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா? என்றார்.

25-ஆம் வசனத்தில், இயேசு, தன்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று உறுதியளிக்கிறார். அடுத்த வசனத்தில் (வச.26), உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன், மரியாமல் இருப்பான் என்றும் குறிப்பிடுகிறார். அப்போது, உயிரோடிருந்து விசுவாசிக்கிறவனுக்கு சரீரப்பிரகாரமான மரணமே இல்லை என்ற வியாக்கியானத்தை எடுத்துக்கொள்ளும் அபாயம் ஏற்படுகிறது. சாவாமை போதனையின் ஆதரவாளர்கள் இந்த வசனத்தை அடிப்படையாய் வைத்து, விசுவாசிக்கிறவர்களுக்கு பூமியில் மரணமில்லா வாழ்க்கை உண்டு என்று போதிக்கின்றனர். இந்த வசனத்தின் முதல் வரியில் (வச.25), மரணத்திற்கு பின்னான நித்திய வாழ்க்கையையும், இரண்டாவது வரியில் மரணமில்லா பூமிக்குரிய வாழ்க்கையையும் (வச.26) இயேசு குறிப்பிடுகிறார் என்றும் போதிக்கின்றனர். இந்த வியாக்கியானம் முற்றிலும் தவறானது!

இந்த வேதப்பகுதியில் இடம்பெற்றுள்ள இயேசுவின் இந்த வார்த்தைகளை அதின் இலக்கிய கண்ணோட்டத்தில் அணுகவேண்டும். எந்த சூழ்நிலையில், யாரிடம் இயேசு இந்த வார்த்தைகளை கூறியிருக்கிறார் என்று பார்க்கவேண்டியது அவசியம்.

### சம்பவத்தின் சூழல்

யோவான் சுவிசேஷத்தின் 11ஆம் அதிகாரம், லாசரு மரித்து, மீண்டும் உயிரோடு எழும்பிய சம்பவத்தை பதிவுசெய்கிறது. லாசரு மரித்தபோது இயேசு ஊரில் இல்லை. அவரை அழைத்து வர மார்த்தாளும் மரியாளும் ஆள் அனுப்புகின்றனர். ஆனாலும் இயேசு இரண்டு நாட்கள் கழித்தே பெத்தானியாவுக்கு வந்துசேருகிறார். அவரிடத்தில் மார்த்தாள், நீர் இங்கே இருந்திருந்தீரானால், என்னுடைய சகோதரன் மரித்திருக்கமாட்டானே என்று வேதனைப்படுகிறாள். அதற்கு மறுவார்த்தையாகவே இயேசு மேற்கண்ட வசனங்களை (வச.25-26) உரைக்கிறார்.

### இரண்டு கூட்டத்தினர்

இயேசு தன்னுடைய பதிலில் இரண்டு கூட்டத்தினரை அடையாளப்படுத்துகிறார்:

1. மரித்தாலும் பிழைக்கிறவர்கள்; 2. மரியாமல் இருக்கிறவர்கள். முதலாவது கூட்டத்தினர் மரணத்தை சந்தித்து, அடக்கப்பண்ணப்பட்டு, அவருடைய வருகையில் மீண்டும் உயிரோடு எழும்பி நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கிற கிறிஸ்தவர்கள். இரண்டாவது, மரணத்தை சந்திக்காமல், நேரடியாக நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறவர்கள். இந்த இரண்டு கூட்டத்தினரும் இயேசுவை விசுவாசிப்பவர்கள். இரண்டு தரப்பினருக்கும் ஆசீர்வாதம் சரி சமமாகவே கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. இதில் முந்தின ஆசீர்வாதத்தைப் பெறுகிறவர்கள், பிந்தின ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாகிறவர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்பது தெளிவாக தெரிகிறது. இந்த இரண்டு கூட்டத்தினரையும் ஒப்பிட்டு, இதில் ஒரு கூட்டத்தினர் சிறந்தவர்கள் என்று அம்பலப்படுத்துவது இயேசுவின் நோக்கமில்லை. இருவருமே நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்கள் என்பதில் ஐயமில்லை. அப்படியிருப்பின், இரண்டு கூட்டத்தினரையும் இயேசு பிரித்து காண்பிக்கவேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி எழும்பக்கூடும். ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை வைத்தே அவர்கள் இரண்டு தரப்பினராய் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

### இரண்டாம் வருகையின் சூழல்

யோவான் 11:25-26 வேதப்பகுதியை இயேசுவின் இரண்டாம் வருகையின் பார்வையிலேயே புரிந்துகொள்ள வேண்டும். இயேசு மனிதனாய் பூமியில் அவதரித்தது அவருடைய முதல் வருகை. அவர் பரமேறி மீண்டும் வந்து எல்லோரையும் அழைத்து செல்வதாக வாக்களித்தது, வரப்போகிற அவருடைய இரண்டாம் வருகை. இன்றும் திருச்சபை அவருடைய இரண்டாம் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. இயேசுவின் போதனைகள் அனைத்தும் அவருடைய முதல் வருகைக்கும் அவருடைய இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தது என்பதினால், அவருடைய போதனைகள் அனைத்தும் அவருடைய இரண்டாம் வருகைக்கு ஜனங்களை ஆதாயமாக்கும் நோக்குடனேயே போதிக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

இயேசு மார்த்தாளுக்கு பதிலளிக்கும்போது, தன்னுடைய இரண்டாம் வருகையை மனதில் வைத்தே பதிலளித்திருக்கிறார் என்பது புலனாகிறது. அதாவது, (வச.25) என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

இயேசுவை விசுவாசிக்கிறவர்கள், அவருடைய இரண்டாம் வருகையை சாட்சியிடுவதற்கு முன்னர் மரணத்தை சந்தித்தால், அவர்களுக்கு மீண்டும் உயிர்த்தெழுதல் கொடுக்கப்பட்டு மகிமையின் சரீரம் கொடுக்கப்படும். அந்த மகிமையின் சரீரத்தோடு பரலோக இராஜ்யத்தில் அவர்கள் நித்திய வாழ்க்கையை அனுபவிப்பர். இந்த வசனத்தை வியாக்கியானம் செய்வதில் எந்த குழப்பமும் இல்லை. இது மரணத்திற்கு பின்னான நித்திய வாழ்க்கையை குறித்தே சொல்லப்பட்டுள்ளது என்பதில் நிபணர்களுக்கு ஒருமித்த கருத்து இருக்கிறது. ஆனால் சாவாமை உபதேசத்தை போதிக்கிறவர்கள் 26ஆம் வசனத்தையே மையப்படுத்து கின்றனர்.

(வச. 26) உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்;

இயேசுவின் இரண்டாம் வருகையை சாட்சியிடும்போது உயிரோடிருக்கிறவர்கள், மரணத்தை ருசிபார்க்காமல், அவரோடு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரலோக இராஜ்யத்தின் நித்திய வாழ்க்கையை அனுபவிப்பர். இயேசுவின் இரண்டாம்

வருகை சரித்திரத்தின் ஒரு குறிப்பிட்ட நாளில் நடந்தேறும் என்பதே நம்முடைய மகிமையான நம்பிக்கை. அந்த நாளில் நிச்சயமாய் ஒரு சந்ததி பூமியில் உயிரோடிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி உயிரோடிருந்து அவருடைய வருகையை சாட்சியிடும் அந்த விசுவாசக்கூட்டம், அவரோடு எடுத்துக்கொள்ளப் படுவர். அவர்கள் பூமிக்குரிய மரணத்தை சந்திக்கவேண்டிய அவசியம் இருக்காது. அந்த வகையில், சரீரப்பிரகாரமான மரணத்தை சந்திக்காத ஒரு கூட்டம், பரலோகத்தை சுதந்தரிப்பது நிச்சயமே. இந்த வசனத்தில் இயேசு சொல்ல வருகிற கருத்து இதுவே.

ஆகமொத்தம், இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய இரண்டாம் வருகையின்போது எந்த நிலையில் இருந்தாலும் (மரித்திருந்தாலும், உயிரோடிருந்தாலும்), அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதே இயேசுவின் வார்த்தைகள் வெளிப்படுத்தும் சத்தியம். இயேசுவின் வருகை நம்முடைய நாட்களில் சம்பவிக்கும் என்ற ஆயத்தத்துடன் கூடிய நம்பிக்கைக்கு நாம் பாத்திரராய் இருக்கவேண்டியது ஒருபுறம் அவசியம். அப்படி அது நம்முடைய நாட்களில் சம்பவிப்பதற்கு முன்பாக நாம் மரணத்தை சந்திக்க நேரிட்டாலும், அதினால் விசுவாச கூட்டத்தினருக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அவர்கள் மரித்து அடக்கம்பண்ணப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு மீண்டும் உயிர்த்தெழுதல் கொடுக்கப்பட்டு, நித்திய ஜீவனுக்குள் அனுமதிக்கப்படுவர். இதுவே இயேசு மார்த்தாளுக்கு புரியவைக்க முயன்ற செய்தி.

லாசருவை உயிரோடு எழுப்புவதற்கு சற்று முன்னரே இயேசு இந்த வார்த்தைகளை பேசுகிறார். பூமியில் நிகழ்த்தப்பட்ட சரீரப்பிரகாரமான ஒரு உயிர்த்தெழுதலை வைத்து, உலகத்தின் இறுதியில் நிகழப்போகும் உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு ஒப்புமைப்படுத்தி பேசுகிறார்.

இந்த வேதப்பகுதியை மேற்கோள் காண்பித்து, பூமியில் மரணமில்லாத வாழ்க்கையை ஒருவர் பெற்றுக்கொள்ள முடியும் என்று போதிப்பது, வேத போதனைக்கு முற்றிலும் முரண்பாடானது. பூமியிலே மனிதனுக்கு மரணமில்லா நித்திய வாழ்க்கை உண்டு என்று வேதம் எங்கும் போதிக்கவில்லை. சாவாமை என்னும் கள்ளப் போதனையானது முற்றிலும் வேதத்திற்கு புறம்பானது.

இயேசுவின் வருகையின்போது பூமியில் உயிரோடிருக்கும் ஒரு விசுவாசக்கூட்டத்தினர் மரணமில்லாமல் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார் என்பது உண்மையே. அது நம்முடைய நாட்களில் நிகழவேண்டும் என்ற நல்ல எதிர்பார்ப்புடனேயே திருச்சபை விசுவாசத்தில் பலப்படவேண்டும்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484




அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! நம்மை பிறருக்கு வெளிச்சம் காண்பித்து பிரகாசிக்கிறவர்களாய் ஏற்படுத்தி வைத்திருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

கடந்த மாதங்களில் நாம் பிரகாசிக்கும் விளக்காய் விளங்க, விளக்குத் தண்டு மற்றும் எண்ணெயின் முக்கியத்துவத்தைத் தியானிக்கத் தேவன் கிருபை செய்தார். நாம் பின்பற்றுகின்ற உபதேசம் மற்றும் ஆவியானவரின் நிறைவான அபிஷேகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள தேவன் உதவினார்.

இவைகளுக்கு அடுத்தபடியாய் விளக்கில் உள்ள திரி மிகவும் முக்கியமானது. விளக்குத் தண்டு இருந்தும், எண்ணெய் இருந்தும் விளக்கில் திரி இல்லாமல் போனால் அது விளக்கும் அல்ல அது பிரயோஜனப்படுவதும் இல்லை. ஒரு திரி பார்க்கச் சாதாரணமாக இருந்தாலும் அதுவே விளக்குத் தண்டிற்கும், எண்ணெய்க்கும் அர்த்தம் சேர்க்கிறதாயிருக்கிறது. இதனை வாசிக்கும் வாலிபர்களே, உபதேசங்கள் இருக்கலாம், அபிஷேகம் இருக்கலாம் ஆனால் இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியம் 'நீங்களே'.

ஒரு விளக்கின் திரிக்கு ஒப்பாய் இருக்கும் நீங்கள், திரிக்கு இருக்கும் குணாதிசயங்கள் உடையவர்களாய் இருந்தால் பிரகாசிப்பது நிச்சயம். ஒரு சாதாரணமாகக் காணப்படும் திரியினிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டு முக்கியக் காரியங்கள்.

**1. எரிந்து கறைந்து போவதற்கும் ஆயத்தமான திரி:-**

திரியானது எரிய எரிய குறையும் என்றாலும், தான் எரிந்து மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கிற சுயநலமற்ற வாழ்வையே குறிக்கிறது. நம்மை அழைத்த தேவன், நாம் பலருக்கு ஆசீர்வாதமாகவும் அவருடைய நாமத்திற்கு மகிமையாகவும் இருக்கவே அழைத்தார். நாம் நம்மைக் குறித்து சுயநலமாய் இருப்போமேயானால், நம்மால் பிறருக்கு எந்த பிரயோஜனமும் இராது.

அப்போஸ்தலனாகிய பவுல் தான் எப்போதும் பிறருக்கு ஆசீர்வாதமாக இருப்பதையே விரும்பினார், அதற்காகப் பல இன்னல்களைத் தன் வாழ்வில்

சுமந்தார். கலாத்தியர் 4:19 ஆம் வசனத்தில், 'என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்.' என்று சொல்லும் போது பிறர் வாழ்வில் கிறிஸ்து உருவாகத் தன் நிலைமை ஒரு திரி படும் பாடுபோல் என்று தெளிவுபடுத்துகிறார்.

யோவான் ஸ்நானன் தன் வாழ்வில் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட யோவான் 3:30 ஆம் வசனத்தில், 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.' என்று சொல்லும் போது தன்னைத் திரியைப் போல் ஒப்புக்கொடுக்கிறதைக் காணமுடியும். அருமையான வாலிபரே, நாம் பிறருக்காகவும், கிறிஸ்து இயேசுவின் நாம மகிமைக்காகவும் திரியைப் போல எரிந்து கறைந்திட ஒப்புக்கொடுப்போம்.

## 2. விளக்கில் இருந்து, எண்ணெயை எடுத்து எரிய ஆயத்தமான திரி:-

திரியானது தான் எரிவதற்கு அதன் மறுமுனை எண்ணெயில் இருக்கும். ஒரு முனை எண்ணெயில் ஊறஊற மறுமுனை வரை எண்ணெய் சென்று நன்கு தடையில்லாமல் எரிந்து பிரகாசிக்கும். இதை வாசிக்கும் வாலிபரே, தங்கள் வாழ்க்கை இயேசு கிறிஸ்துவோடு, பரிசுத்த ஆவியானவரோடு, வேதத்தோடு, சபையோடு எவ்வளவு ஊறி இருக்கிறதோ அவ்வளவு நாம் பிறருக்கும், தேவ நாமத்திற்கும் பிரயோஜனமாக இருப்போம்.

கலாத்தியர் 2:20 ஆம் வசனத்தில் பவுல் சொல்லும் போது 'கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்று தான் கிறிஸ்துவில் எவ்வளவு மூழ்கியிருக்கிறார் என்று வெளிப்படுத்துகிறார். இந்த அனுபவத்தினால் தேவனுக்கு மகிமையாகவும் பிறருக்குப் பிரயோஜனமாகவும் வாழ்ந்தார்.

யோவான் 15:5 ல், 'நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்' என்று இயேசு சொன்னார். இந்நாட்களில் நாம் இயேசுவிலும், அவர் அருளின பரிசுத்த ஆவியானவரிலும், அவர் வார்த்தையிலும், அவர் சரீரமாகிய சபையிலும் வேரூன்றி நிற்போம், தேவனுக்கு மகிமையாய் வாழுவோம், பிறருக்கு பிரயோஜனமாக பிரகாசிப்போம்.



**THERE ARE 3 TYPES OF PEOPLE IN THE WORLD:**

- PEOPLE WHO ***MAKE*** THINGS HAPPEN
- PEOPLE WHO ***WATCH*** THINGS HAPPEN
- PEOPLE WHO ***WONDER*** WHAT HAPPENED



# ஆத்தும ஆதாயப் பயிற்சி

**Rev. J. தேவதாசன் கலையரசன்**
வில்லிவாக்கம் மண்டல தலைமைப் போதகர்

## முன்னுரை

ஆத்தும ஆதாயப் பயிற்சி கொடுக்க கற்றுக் கொள்வோம். ஆத்தும ஆதாயப் பயிற்சி கொடுக்க சிறந்த ஆசிரியர், சபை போதகரே. புதிதாக இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள், சுவிசேஷ ஊழியப் பயிற்சிக்கு சிறந்த மாணவர்களாகக் இருப்பார்கள். இன்று நற்செய்தி ஊழியத்தைக் கற்றுக்கொடுக்கும். ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரு சேர சிந்திக்க வேண்டிய சில முக்கிய விவரங்களைக் காண்போம்.

## I. அறிவித்தல் மட்டுமா? vs விளைவுகளை ஏற்படுத்தும் நற்செய்தி ஊழியமா?

ஒரு இறையியல் மாணவர் நற்செய்தி ஊழியத்தைக் குறித்து விரிவாக கற்றுக்கொள்ள விரும்பினால், அவருக்கு உதவி செய்யும் விதத்தில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் இந்நாட்களில் வெளிவந்திருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகள், ஆத்தும ஆதாயப் பயிற்சி நூல்கள் (Soul winning training manuels) பிரசித்தி பெற்ற ஆசிரியர்களின் சொற்பொழிவுகள், வலைதளத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு ஆய்வு மாணவருக்கும், குறிப்பிட்ட தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுத ஏராளமான புத்தகங்கள், ஆய்வாளர்களின் ஆராய்ச்சி நூல்கள் ஆதாரமாக தேவைப்படும். (Secondary data) சுவிசேஷ ஊழியத்தில் எந்த தலைப்பிலும், எந்த **பிரச்சனைக்கும்** ஏற்ற ஆய்வறிக்கை எழுத (Thesis) ஏராளமான நூல்கள், ஆய்வுக்குறிப்புகள் உண்டு.

ஆயினும் **நற்செய்தி ஊழியம் என்றால் என்ன?** என்ற ஒரு **சிறிய** கேள்விக்கு ஒரு வரி பதில் இப்புத்தகங்களில் கிடைப்பதில்லை என்பதை, ஆசிரியர்கள், மாணவர்கள் அறியும்போது அதிர்ச்சி அடையக்கூடும். பல்வேறு புரிதல்கள், அர்த்தப்படுத்தல்களுடன், தங்கள் பார்வையை, புரிதலை மையப்படுத்தியே அனைத்து புத்தக ஆசிரியர்களும் எழுதியிருக்கிறார்கள்.

நூற்றுக்கும் அதிகமான புத்தகங்கள்? நூற்றுக்கணக்கான ஆய்வுகட்டுரைகளை வாசித்த பின் நமக்கு ஏற்படும் தெளிவு இதுதான். ஒரு சில ஆசிரியர்கள், இயேசுகிறிஸ்துவை சுவிசேஷமாக அறிவிப்பதே நற்செய்தி ஊழியம், அதன் விளைவாக ஏற்படும் மனமாற்றம், சீஷத்துவம் போன்ற விளைவுகளுக்கு நற்செய்தியாளர் மெனக்கிடத் தேவையில்லை என்று கருதுகிறார்கள். ஒரு நற்செய்தியாளர் 'அறிவித்தலை' மட்டுமே முதன்மைப்படுத்தினால்தான் **முழு உலக சுவிசேஷம்** சாத்தியம் (அப்.1:8) என்பது இவர்களது வலுவான கருத்து.

வேறு பல நூலாசிரியர்கள், அறிவித்தலுடன் நற்செய்தி ஊழியத்தை சுருக்கிவிடக்கூடாது, மட்டுப்படுத்தக்கூடாது எனக்கருதுகிறார்கள். ஏனென்றால் 2000 வருடங்கள் வெறுமனே **அறிவிப்பதே** நற்செய்தி ஊழியம் என சுருக்கிக் கொண்டதால்தான், சுவிசேஷம் கேட்டோர் அநேகர். பின்பற்றுபவராக சிலர் என்ற

நிலை இன்றுவரை நீடிக்கிறது. பிரதான கட்டளையின்படி **சீஷராக்கவே** நற்செய்தி அறிவித்தல் தேவைப்படுகிறது. எனவே சீஷராக்கும் நோக்கத்துடன் நற்செய்தி அறிவித்தலே **முழுமையான நற்செய்தி** ஊழியம் என இவர்கள் கருதுகிறார்கள்.

இப்போது நாம் சேகரித்த நூற்றுக்கணக்கான புத்தகங்களையும் இருபெரும் பிரிவாக பிரிக்கலாம். ஒன்று **அறிவித்தலே** என்று கூறுவது. அதில் நற்செய்தி ஊழியத்தின் **விளக்கம் ஏன்? யார்? எப்படி?** சுவிசேஷ மையச் **செய்தி** எது? அறிவித்தலில் சிறந்த **முறை** எது? போன்ற தலைப்புகளில் பாடங்கள் இருக்கும்.

மற்றொன்று **விளைவுகளே என்கின்ற வாதம் உடையது.** அதில் சீஷராக்குவது, சபை நிறுவுதல், சபை வளர்ச்சி போன்ற பாடங்கள் கூடுதல் பாடங்களாக இருக்கும். இறையியல் மாணவர்களுக்கு, **அறிவித்தலே** நற்செய்தி ஊழியம் என்று வலியுறுத்தப்படும்போது, பயிற்சி முழுமை அடைவதில்லை. எனவே தான் இன்றைய அநேக இறையியல் மாணவர்கள், நற்செய்தி ஊழியப் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைந்தபோதும், சுவிசேஷம் அறிவிக்கப் பழகியும் களம் திரும்பி செயல்படத் துவங்கும்போது **சபை நிறுவுவதை** சவால்மிக்கதாக பார்க்கிறார்கள்.

நற்செய்தி ஊழியம் என்றால் என்ன? ஏன் செய்ய வேண்டும்? என்கின்ற அடிப்படை உண்மைகளை மட்டும் கற்றுக் கொண்டால் போதாது. நான் நற்செய்தி அறிவிப்பதால் என்ன **விளைவுகளை ஏற்படுத்தப் போகிறேன்** என்பதையும் இன்றே **தரிசிக்க** வேண்டும்.

### II. முறைகளா? VS மாறாத கொள்கைகளா?

பொதுவாக எந்த ஒரு நற்செய்தி ஊழியப் பயிற்சியிலும் (Soul Winning Training) கலந்து கொள்பவர்கள் பெரும்பாலும் ஏதாகிலும் ஒரு குறிப்பிட்ட **முறையை** கற்றுக்கொள்வதற்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள். **முறைகளைப்** படிப்பதற்கு முன் நற்செய்தி ஊழியக் கொள்கைகளை அறிவதே நல்லது. ஏனென்றால் நேற்று பயனளித்த முறை இன்று பயனற்றுப் போகலாம். முறைகள் காலத்துக்கேற்ப மாறுபவை. ஆனால் நற்செய்தி ஊழியக் கொள்கைகள் (Principles) என்றும் மாறுவதில்லை. குறிப்பாக இயேசுகிறிஸ்து கற்றுக் கொடுத்த மற்றும் அவரே ஏற்படுத்திய முன்மாதிரிகளை வைத்து, நற்செய்தி ஊழியக் **கொள்கைகளை** புரிந்து கொள்ள வேண்டும். எனவே நற்செய்தி ஊழியம் என்றால் என்ன? ஏன் செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? யார் செய்ய வேண்டும?; என்ற பொதுவான போதனைகளைவிட, **இயேசுகிறிஸ்துவின்** ஊழிய மாதிரி, **அப்போஸ்தலரின் ஊழிய மாதிரி, வேதாகம கால சபைகளில்** உறுதிப்பட்ட நற்செய்தி ஊழியக் கொள்கைகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

எனவே நற்செய்தி ஊழிய கொள்கைகளை கற்றுக் கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். முதலாவது நற்செய்தி ஊழியத்தின் கொள்கைகளையும் (Principles) பின்பு முறைகளிலும் (Methods) தேர்ச்சி பெறுங்கள்.

நற்செய்தி ஊழியத்தைக் கற்றுக் கொடுப்பதில் இயேசு கற்பித்த மாதிரி, **"ஊழியம் செய்து ஊழியத்தைக் கற்றுக் கொள்வதே" (In-service Model).**

### III. எளிய விளக்கமா? VS ஆழமான விளக்கங்களா?

1. நற்செய்தி ஊழியப் பயிற்சியில், நற்செய்தி ஊழியம் என்றால் என்ன என்பதற்கு, மூலப் பத விளக்கங்கள் (உ.ம்) யுவாங்கலியோன் மற்றும்

இறையியல் பின்னணியில் நற்செய்தியின் விளக்கம் என்னவென்று விவரிப்பதுண்டு. இது அவசியம் தான். ஆனால் ஆரம்ப நிலை மாணவர்களுக்கு அப்பதங்கள், மிரட்டலாக இருக்கக்கூடும், **மனுஷரை பிடிப்பதே** நற்செய்தி ஊழியம் (மத்.4:19) என்கின்ற எளிய விளக்கமே போதுமானதாகும்.

2. **ஏன்** செய்ய வேண்டும் என்பதற்குரிய **எளிய விளக்கம்.**

வேதாகம அடிப்படை சரித்திரம் பின்னணி, நடப்பு உலக தேவைகள் இவைகளெல்லாம் ஆத்தும பாரத்தை ஏற்படுத்தும், ஆயினும் இதிலும் எளிய புரிதல் ஆரம்ப நிலை **மாணவர்களுக்கு** அவசியமானது.

- நீங்கள் இரட்சிக்கப்பட யாரோ ஒருவர் சொன்னது தானே காரணம். ஆதனால் ஆசீர்வதிக்கப்பட்டேன் என்று பல வருடங்கள் சாட்சி கூறி வரும் நங்கள் ஒருவரிடமாவது சுவிசேஷம் அறிவித்து ஆதாயம் செய்ய வேண்டாமா? போன்ற அவர்களை தொடர்புப்படுத்திக் கேட்கப்படும் கேள்விகள் **'ஏன்'** என்பதை எளிமையாக்கும்.

3. **என்ன** சொல்ல வேண்டும் என்பதற்கான எளிய விளக்கம்.

இயேசுகிறிஸ்து யார் அவர் என்ன செய்தார் (அப்.10:38) என்கிற செய்தியே (1கொரி.15:1-3).

**இறுதியாக**

நீங்கள் ஒரு ஆத்துமாவை ஆதாயம் செய்வது ஒரு பழத்தை சாப்பிடுவதற்கு இணையானது. ஆனால் அத்தும ஆதாய வீரர்களை உருவாக்குவது என்பது அக்கனியின் விதையை பூமியில் புதைப்பதற்கு சமானமாகும். அது உங்கள் காலத்திற்குப் பின்பும், நீண்ட விளைவுகளை ஏற்படுத்தும்.

---

## பரிசுத்த வேதாகமம்

உலகத்திலேயே அதிகமான பேர் வாசிக்கும் புத்தகம் பரிசுத்த வேதாகமம்!

உலகிலேயே அதிகமாக விற்பனை செய்யப்படுகிற புத்தகமும் வேதாகமமே!

மேலும் உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம்! இந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த 2023 செப்டம்பர் மாத கணக்கின்படி முழு வேதாகமமும் 736 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாடு மட்டும் மேலும் 1658 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இது தவிர வேதாகம பகுதிகள் சுமார் 1264 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இப்படி சுமார் 3658 மொழிகளில் வேதாகமத்தின் ஏதோ ஒரு பகுதியில் இன்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதினிமித்தம் உலகிலுள்ள சுமார் 650 கோடி பேர் வேதாகமத்தை தங்கள் சொந்த மொழிகளில் வாசிக்க முடியும்.

தொடர்ந்து வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியர்களுக்காக ஜெபிப்போம்!

இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் சொந்த மொழிகளில் வேதத்தைப் படிக்கத்தக்க கர்த்தர் அருள் புரிவாராக.



# படிப்பிலும் படைப்பிலும் பரிசுத்த ஆவியானவர்

(Holy Spirit in Academics and Creation)

**Rev.David Merwin Prabahar E.**
(Secretary, SFC)

அன்பார்ந்த மாணவர்களுக்கு, கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியத்தின் சார்பில் வாழ்த்துக்கள். படிக்கும் பருவம் இனிமையானது, அதோடு சவால் நிறைந்ததும் கூட. சத்தியத்தை அறிந்து, இயேசுவை விசுவாசித்து, சத்திய வேதத்தின் வார்த்தைகளை பின்பற்றும் மாணவர்களுக்கு உலக கல்வியை கற்பதும், புரிந்துகொள்வதும், எது உண்மை என்று ஆராய்வதும் சவால் நிறைந்ததே.

அறிவியலில், மனிதன் குரங்கில் இருந்து வந்தான் என்ற சார்ல்ஸ் டார்வினின் (Charles Darwin) கூற்று சொல்லிக்கொடுக்கப்பட, சத்திய வேதமோ மனிதன் தேவனுடைய கரத்தினால் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டு நாசியிலே ஜீவசுவாசம் ஊதப்பட்டு ஜீவாத்துவமாவானான் என்று கற்பிக்கிறது. இதில் எதை நம்புவது? இதைபோல் இருக்கும் சவால்களை எப்படி சந்திப்பது என்கிற கேள்விக்கு மிக முக்கியமான பதில் பரிசுத்த ஆவியானவர்.

## போதித்து உதவிசெய்யும் ஆசான் : (TEACHER WHO TEACHES AND HELPS)

உலகத் தோற்றம் முதலே திரித்துவத்தில் மூன்றாம் நபரான ஆவியானவர் செயல்பட்டு வருகிறார். இன்னும் பொருந்த சொல்லவேண்டுமானால், உதவி செய்து வருகிறார். யோவான் 14:26 குறிப்பிடுவதுபோல "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்". பரிசுத்த ஆவியானவரே எல்லாவற்றையும் நமக்குப் போதித்து உதவிசெய்கிறார். மாணவர்களாகிய உங்களுக்கு படிப்பில் இருக்கும் குழப்பங்களை தீர்க்க பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் உதவி செய்வார். பரிசுத்த ஆவியின் உதவியோடு படிக்கும்போது, சரியானதை சரிவர கற்கவும், தவறானதை துல்லியமாக அறியவும் உதவுகிறார்.

அதுமட்டும் அல்லாமல், சேர்ந்து படிக்கும் மற்ற மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும் உதவிசெய்கிறார். தடுமாறும் சூழ்நிலைகள் வரும்போது மாற்கு 13:11 சொல்வதுபோல பரிசுத்த ஆவியானவரே எதை பேச வேண்டும் என்று கற்றுக்கொடுப்பார்.

மாற்கு 13:11 "அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும் போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்; அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்".

லூக்கா 12:12 நீங்கள் பேசவேண்டியவைகளை பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார் என்றார்.

பரிசுத்த ஆவியானவரை சார்ந்த ஒரு ஜீவியம் இருக்குமானால், அவரைவிட பெரிதான ஆசிரியர் ஒருவர் இருக்க முடியாது. சிறந்த ஆசிரியராய், அர்த்தத்தை புரியச்செய்து, வாழ்விலும் பயன்படுத்த உதவிடுவார்.

## மறைபொருளை வெளிப்படுத்தும் ஈசன்:(TEACHER WHO REVEALS THE SECRET)

கற்பிப்பதோடு மாத்திரமல்ல, கண்டுபிடிக்கவும் உதவி செய்கிறார். ஆம், அறிவியல் விஞ்ஞானியான ஐசக் நியூட்டன் (Isaac Newton) தனது வாழ்நாள் முழுவதும் வேதாகமத்தின் சத்தியத்தை இயற்பியலின் அறிவியல் சோதனை மற்றும் அறிவியல் கோட்பாட்டின் மூலமாக சோதித்து, அதில் ஒரு முரண்பாட்டையும் காணாமல் தேவனுடைய கரத்தின் கிரியைக்கு சரித்திரமும், இயற்கையின் ஒழுங்கும் ஒரு ஆதாரமாக கருதினார். அதின் விளைவாக அவர் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகள் அறிவியல் உலகத்தில் இன்றியமையாதவைகள்.

தானியேலின் வாழ்க்கையை பார்க்கும்போது (தானியேல் 2:19,47) தரிசனத்தில் தேவன் அவனுக்கு மறைபொருளை வெளிப்படுத்தினார். உலகத்தார் அறியாத, கல்விமான்கள் கண்டிராத, அறிஞர்கள் யூகிக்காததைகூட தேவ ஆவியானவர் ஜெபிக்கிற மாணவர்களாகிய உங்களுக்கு வெளிப்படுத்த முடியும்.

தானியேல் 2:19, பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது; அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரித்தான்.

தானியேல் 2:47, ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருளைகளை வெளிப்படுத்துகிறவருமா யிருக்கிறார் என்றான்.

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் (George Washington Carver) என்கிற விஞ்ஞானி தனது தேசத்தில் விவசாயிகள் தொடர்ந்து பருத்தி சாகுபடி செய்ததால் பயிர் நிலத்தின் வளம் குறைந்து கெட்டுப்போனது. இதற்கு பரிகாரமாக நிலக்கடலையை சாகுபடி செய்ய உற்சாகப்படுத்தினார். அதின் மூலம் நிலம் நல்ல வளம் பெற்றது. ஆனால் நிலக்கடலைகள் அதிக அளவில் விளைந்ததால் அதனை விற்று லாபம் பார்க்க முடியாமல் திணறினார்கள். காரணம் அச்சமயத்தில் நிலக்கடலைகள் விலங்கு தீவனமாக மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

இதனால் மனமுடைந்த கார்வர், தேவனிடத்தில் "இந்த உலகத்தின் இரகசியம் என்ன? அதில் இந்த நிலக்கடலையின் இரகசியம் என்ன? அதை கற்றுத்தாரும்" என்று கேட்டார். அதற்கு தேவன் "ஆதியாகமம் 1:29ஐ ஞாபகப்படுத்தி, நிலக்கடலையை மனிதனுக்கு எப்படி பிரயோஜனமாக்கலாம் என்று ஆராய ஊக்கமளித்தார்"

ஆதியாகமம் 1:29 பின்னும் தேவன்: இதோ, பூமியின்மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகளை உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது;

அதின்விளைவாக தன் ஆய்வுகூடத்தில் ஆராய்ச்சிசெய்து, நிலக்கடலையின் 300 விதமாக பயன்பாட்டை கண்டுபிடித்தார். அது சந்தையில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. கார்வர் கூறுகையில், நான் அடிக்கடி தீர்க்க முடியாத பிரச்சனைகளோடு படுக்கைக்கு செல்வேன், நான் கண்விழித்து பார்க்கும்போது கர்த்தர் எனக்கு பதிலை தந்திருப்பார்.

1 கொரிந்தியர் 2:10-ல் சொல்லப்பட்டபடியே ஆழங்களை ஆராய்ந்திருக் கிறார். ஆழத்தை வெளிப்படுத்துவார். "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்".

ஆம் மாணவர்களே, கர்த்தரை நம்பி ஜெபத்தோடும் முனைப்போடும் செயல்படுவீர்களானால், வேண்டியதை வெளிப்படுத்தி, சரியான பாதையில் சிந்திக்க உற்சாகப்படுத்தி உங்களை சாதிக்க செய்வார்.

**ஞானம் அருளும் நிசிந்தன் : (TEACHER WHO BESTOWS WISDOM)**

கற்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் அடித்தளமான ஞானத்தையும் தேவ ஆவியானவரே அருளுகிறார். அவர் நம்மிடத்தில் வாசம் பண்ணும்போது ஏசாயா 11:2-ன்படி ஞானத்தையும், அறிவையும் தருகிறார்.

ஏசாயா 11:2-ல் ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

தானியேல் 1:17,20 வசனங்களில் குறிப்பிடுகையில், தானியேலுக்கும் அவன் நண்பர்களுக்கும் தேவன் எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலை சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். அவர்கள் மற்றவர்களை விட பத்துமடங்கு சாமர்த்தராகக் காணப்பட்டார்கள். தானியேலும் அவன் நண்பர்களும் தங்களை பரிசுத்தமாக காத்துக்கொண்டபடியினால் தேவ ஆவியானவர் அவர்களோடு இருந்து அவர்களுக்கு ஞானத்தை அருளினார்.

மாணவர்களாகிய நீங்களும் படிக்கும் இடத்தில் தேவனுக்குப் பயந்து, பரிசுத்தத்தை காத்துக்கொண்டு ஜீவிப்பீர்களானால் தேவன் நிச்சயமாய் பரிசுத்த ஆவியினால் ஞானத்தை அருளுவார். யாக்கோபு 1:5-ல் சொல்வதுபோல ஞானத்தில் குறைவுள்ளவர்களும் விசுவாசத்தோடு கேட்கும்போது, அவர்களுக்கு கொடுப்பார்.

கர்த்தருக்கு தேவை விருப்பமுள்ள ஒரு மாணவன், மனமுவந்து பரிசுத்த ஆவியின் உதவியை நாடுவானானால், அம்மாணவனை எடுத்து பயன்படுத்தி அவர்களைக் கொண்டு எதை வேண்டுமானாலும் பரிசுத்த ஆவியானவரால் செய்ய முடியும்.

அன்பு மாணவனே, மாணவியே! 'ஆசானாய்', 'ஈசனாய்', 'நிசிந்தனாய்' பரிசுத்த ஆவியானவர் உனக்கு ஆசிரியராக இருக்கிறார்.

அவரை சார்ந்துகொள், வாழ்க்கையில் சாதித்துக்கொள்.

---


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் ஒரு ஒரு வித்தியாசமான நபருடைய உண்மை சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளப்போகிறேன்... வாங்க கதைக்குள்ள போகலாம்.

ஒரு நாள் இரவு மன்னனின் காதில் ஒரு பூச்சி நுழைந்து விட்டது. காதில் இருந்த பூச்சியை எடுக்க மன்னனைச் சேர்ந்தவர்கள் படாத பாடுபட்டார்கள். அவர்கள் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. மன்னனின் பிரச்சனையைத் தீர்த்து வைப்பவர்களுக்கு பிரமாண்டமான பரிசுகள் அறிவிக்கப்பட்டன. எங்கிருந்தெல்லாமோ வைத்தியர்கள் வந்தார்கள். யாராலும் அந்தப் பூச்சியை வெளியே எடுக்க முடியவில்லை. நாட்கள் செல்ல செல்ல மன்னனால் தூங்க முடியவில்லை, சாப்பிட முடியவில்லை, தேகம் மெலிய தொடங்கியது.

தூர தேசத்திலிருந்து ஒரு ஞானி ஒருவர் வந்து சேர்ந்தார். மன்னனின் காதை நன்றாகப் பரிசோதித்தார். 'இது மிகவும் அபூர்வ வகை பூச்சி, நம் பக்கத்து மூலிகைகளுக்கு இது கட்டுப்படாது. இங்கிருந்து நூறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஒரு காட்டில் விளையும் அபூர்வமான ஒரு மூலிகைக்குத்தான் இந்தப் பூச்சி கட்டுப்படும். இன்றே என் சீடர்களை அனுப்புகிறேன். எப்படியும் மூன்று நாட்களுக்குள் திரும்பி வந்துவிடுவார்கள். அதன்பின் உங்கள் பிரச்சனை முற்றிலுமாகத் தீர்ந்துவிடும் கவலைப்படாதீர் மன்னா' என்றார்.

இரண்டே நாட்களில் சீடர்கள் மூலிகையுடன் வந்தார்கள். மறுநாள் காலை விடிவதற்கு முன்னால் மன்னனின் காதில் அந்த மூலிகைச் சாறு அரைத்து ஊற்றப்பட்டது. அடுத்த சில நொடிகளில் செத்த பூச்சி வெளியில் வந்து விழுந்தது. மன்னனிடம் அந்தப் பூச்சியைக் காட்டினார் ஞானி. மனநிறைவோடும் சந்தோஷத்தோடும் நன்றி கூறியதுடன், நிம்மதியாகத் தூங்கினார், நன்றாக சாப்பிட்டார், பழைய பொலிவு திரும்பி விட்டது. தூர இடத்திலிருந்து வந்த ஞானிக்கும் அவரது சீடர்களுக்கும் உரிய மரியாதை செய்து அனுப்பி வைத்தார் அந்த மாமன்னன்.

நாட்டு எல்லையைத் தாண்டியதும் ஞானியின் சீடர்களில் ஒருவன் கேட்டான். 'குருவே, அந்த அற்புதமான மூலிகை பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்' எனக்கேட்க, ஞானி புன்னகைத்தார். 'பூச்சி இத்தனை நாள் மன்னனின் செவிக்குள் இல்லை, அவரது மனதிற்குள்தான் இருந்தது. மன்னனின் காதிற்குள் பூச்சி போனது உண்மை தான். ஆனால் அது சிறிது நேரத்திலேயே அது செத்திருக்கும். இல்லையெனில் அது வெளியே வந்திருக்கும். அந்த சிறிது நேரத்தில் பூச்சி மன்னனின் செவியை கடந்து மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஆகவே, அந்தப் பூச்சி காதுக்குள் உயிருடன் இருப்பதாகவே மன்னன் நினைத்துக் கொண்டிருந்தார்.

'குருவே, அதை விளக்கிச் சொல்லி மன்னனை குணப்படுத்தியிருக்கலாமே?" சீடனே, மனோவியாதியை அப்படி எளிதாகக் குணப்படுத்தி விட முடியாது! பிரச்சனை தீவிரமானது என்று மன்னன் நினைத்துக் கொண்டிருந்தார். அதனால் தான் நானும் சிகிச்சை தீவிரமானது என்று பாசாங்கு செய்தேன். தொலைதூரத்தில் இருந்து மூலிகை வர வேண்டும் என்று சிகிச்சையின் முக்கியத்துவத்தை சொன்னேன். 'உண்மையில் நாம் பயன்படுத்திய மூலிகை என்பது, நம் ஊரில் சாதாரணமாக விளையும் செடியின் இலைகள்தான். அதிகாலை இருட்டு நேரத்தில் மூலிகைச் சாற்றை மன்னனின் காதில் விட்டு, ஏற்கனவே பிடித்து வைத்திருந்த ஒரு செத்த பூச்சியைக் காட்டினேன். மன்னன் நம்பி விட்டான். அத்துடன் அவரது மனநோயும் மாறியது'.

இன்று மனித இனத்தைப் பிடித்திருக்கும் நோய்களில் பெரும்பான்மை யானவை நம் உடலில் அல்ல. மனதில் தான் இருக்கின்றன. அன்பு தம்பி தங்காய், இன்று நம்மில் பலர் மனரீதியாக சூழ்நிலையைக் காரணம் காட்டி தமது வாழ்க்கையைத் தாமே கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரச்சனை பெற்றோரிடமோ, ஆசிரியரிடமோ, பள்ளி, கல்லூரியிடமோ, சூழ்நிலையிலோ இல்லை. அது உங்கள் மனதில் தான் இருக்கிறது. உண்மையாகவே நீங்கள் குறிப்பிடும் பூச்சி என்ற பிரச்சனை காதில் இல்லை, மனதில் தான் இருக்கிறது.

இல்லாத பிரச்சனையை, இருப்பதாக நினைத்துக்கொண்டு வெற்றி வாய்ப்புக்களை பலர் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவையற்ற அல்லது மிதமிஞ்சிய சிந்தனைகள், வாழ்க்கையை இருளடையச் செய்கிறது 'சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்: அறுப்பிலே பிச்சை கேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது' (நீதி.20:4) என்று இறைவேதம் கூறுகிறது. ஆகவே காதில் பூச்சி என்று சொல்லி இல்லாததை உணர்ந்து, அழகிய காலத்தை வீணாக்காதிருங்கள்.

'தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது' (ரோமர் 1:21).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

No shining without burning (Ju.5:35).
No progress without pain (Acts 14:22).
No heights without humility (1 Pet 5:6).
No blessing without brokenness (Isa 57:15).
No triumphs without tears (Heb 5:7-9).
No crown without Cross (Heb 12:2)
No life without death (Gal 2:20).
No Strength without weakness (2 Cor 12:9,10).
No acceptance without rejection (Acts 4:11).
No joy without weeping (Psa 30:5b,11)
These maxims maximize life!



## ஏ.ஜி திருச்சபைகளின்

# அடிப்படை வேதாகம உபதேசங்கள்

1. பரிசுத்த வேதாகமம் ஆவியானவரால் ஏவபட்டு எழுதப்பட்டது (2 தீமோ.3:16,17).
2. ஒரே மெய்யான தேவன் திரித்துவமாக வெளிப்பட்டுள்ளார் (உபாகமம் 6:11; மத்தேயு 28:19).
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தெய்வீகமானவர் (மத்தேயு 1:23).
4. மனிதன் தானாக மீறுதலுக்குட்பட்டு வீழ்ச்சியடைந்தான் (ஆதியாகமம் 1:26,27;2:17;3:6).
5. தேவ குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் மட்டுமே மனிதன் இரட்சிக்கப்பட முடியும் (எபே.2:8; ரோமர் 10:13-15)
6. சபையின் அனுசாரங்களான முழுக்கு ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவை திருவசன கட்டளை (மாற்கு 16:16; ரோமர் 6:4; 1 கொரி.11:26).
7. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் சாட்சியுள்ள ஜீவியத்திற்கும் வல்லமையான ஊழியத்திற்கும் அவசியம் (அப்.1:8).
8. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வெளிப்படையான ஆரம்ப அடையாளம் அந்நிய பாஷை (அப்.2:4).
9. பரிசுத்தமாகுதல் (ரோமர் 12:12; 1 தெச.5:23).
10. பாவத்தில் இழந்து போனவர்களை தேடி இரட்சிப்பது சபையின் அருட்பணியாகும் (மத்தேயு 28:19,20).
11. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்காக ஊழியம் செய்யும் ஊழியனாக செயல்பட வேண்டும். மேலும் சபையில் தலைமைத்துவ பொறுப்புகளில் ஐந்துவித வரமுள்ள ஊழியங்களைக் கர்த்தர் நியமித்துள்ளார் (எபேசியர் 4:12,13).
12. தெய்வீக சுகம்-மீட்பின் பரிகாரத்தில் வியாதியினின்று விடுதலை பெறுவதற்கான பரிகாரமும் உட்பட்டுள்ளது (ஏசாயா 53:4,5; மத்தேயு 8:17).
13. கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திப்பது சபையின் ஆசீர்வாதமான நம்பிக்கையாகும் (1 தெச.4:16,17)
14. இயேசு தமது பரிசுத்தவான்களோடு திரும்ப வந்து இப்பூமியிலே 1000 வருடம் ஆட்சி செய்வார் (வெளி.20:1-6).
15. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு இறுதி நியாயத்தீர்ப்பு உண்டு (வெளி.20:11-15).
16. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்காக புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும் (வெளி.21:22).





# O beautiful butterfly!
## (Transformation)


**Rev. பெகின் சாமுவேல்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இதழ்வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பைபிள் சாம்பியன் தேர்வுக்காக ஆயத்தப்பட்டுக்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த உலகம் பல மாற்றங்களை அடைந்திருக்கிறது. அதாவது கற்காலத்திலிருந்து நாம் வாழும் டிஜிட்டல் உலகத்திற்கு உருமாற்றம் அடைந்து வந்திருக்கிறது. இன்னும் பல மாற்றங்கள் நேரிடலாம். எனவே மாற்றம் என்பது அனைவரும் விரும்புகிற ஒன்று. இன்றைய நாளில் உங்கள் கரத்தில் தேவன் தந்த பிள்ளைகளும் ஒரு கம்பளிப்புழுவை போன்றவர்கள். ஆனால் அவர்கள் பல மாற்றங்களை அடைந்து ஒரு வண்ணத்துப்பூச்சியாக மாற போகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். வேதத்திலும் உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2) என்று வாசிக்கிறோம். மறுரூபமென்பது மற்றொரு வடிவமாக மாறுதல் என்ற பொருளை உடையதாக இருக்கிறது. அதாவது அருவருப்பான கம்பளிப் புழுவானது அழகிய வண்ணத்துப்பூச்சியாக மாறுதல் என்று அர்த்தம்.

**எப்படி இந்த மாற்றத்திற்கு நேராக நம்மை தயார்படுத்துவது?**

### 1. Focus on your children

முதலாவதாக, பெற்றோர்களாகிய நாம் மற்றவர்களைக் குறித்து யோசிப்பதை, குறைசொல்வதை, ஒப்பிட்டு பேசுவதை நிறுத்திவிட்டு கர்த்தர் நமக்கு தந்த பிள்ளைகளை உற்சாகப்படுத்தி வளர்ப்போம். கம்பளிப் புழு போன்று குழந்தைகளாய் இன்று இருக்கிறவர்கள் எதையெல்லாம் தன்னைவிட்டு களைந்தால் வண்ணத்துப்பூச்சியாக உருவெடுக்க முடியும் என்பதை தினமும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்து களைய வேண்டியவைகளை களைய உதவி செய்வோம். ஒரு கூடுகையில் பங்குபெற்றவர்களிடம் உங்களிடத்தில் காணப்படும் ஐந்து நற்காரியங்களையும், ஐந்து களைய வேண்டிய காரியங்களையும் எழுதுங்கள் என்று கூறப்பட்டு பேப்பர், பேனா கொடுக்கப்பட்டது. வெகுநேரமாகியும் யாரும் எழுதி முடிக்கவில்லை. மாறாக அருகிலிருந்தவர்களிடம் என்னிடத்தில் என்ன குறை, நற்காரியங்களை நீ காண்கிறாய்? என்று கேட்டுக் கொண்டிருந்தனர். சற்று நேரத்தில் உங்கள் அருகிலிருக்கும் உங்கள் நண்பரின் குறைகளை எழுதுங்கள் என்று சொன்னமாத்திரத்தில் உடனே எழுதிக் கொடுத்து விட்டனர். நாம் எப்போதுமே மற்றவர்கள் மேலே கவனம் செலுத்துகிறவர்களாயிருக்கக் கூடாது. நம்முடைய குறைகளும், நிறைகளும் நமக்கு தெரிந்திருக்க வேண்டும்.

### 2. Forget the past

பின்னானவைகளை மறந்து விடுங்கள். எப்படி அருவருப்பான கம்பளி புழுவானது அழகிய வண்ணத்து பூச்சியாக மாற்றமடைந்த பின் மறுபடியும் தன் பழைய நிலைக்கு திரும்புவதில்லையோ அதுபோலவே உங்கள் பிள்ளைகளின் கடந்த கால தோல்விகள், பாவங்கள், தவறுகளை பேசி பேசி அவர்களை

சோர்வடைய செய்வதை விட்டு விட்டு, அவர்களை உற்சாகப்படுத்தி முன்னோக்கி செல்ல வையுங்கள். தமஸ்குவின் வழியில் இயேசுவால் தொடப்பட்ட பின்னரும், அதற்கு முன்னருமான பவுலின் வாழ்க்கை எத்தனை வித்தியாசமானது. தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்த பவுல்தான் ஆனால் ஒரு நாளும் தான் விட்டு வந்த பழைய வாழ்க்கையை நோக்கி போக விரும்பவில்லை. அப்படி திரும்புவதை வேதம் கடுமையாக கண்டிக்கிறது. நாய் தான் கக்கினதை தின்னவும், பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினதுக்கு ஒப்பாக சொல்லப்பட்டுள்ளது. ஒருபோதும் பிள்ளைகள் விட்டுவந்த பாவ பழக்கவழக்கங்களை நினைவுபடுத்தி பேசி வார்த்தைகளை தவறாக உபயோகிக்காதீர்கள்.

**3. Produce good fruit**

மாற்றமடைந்து, மறுரூபமடைந்த பிள்ளையானது ஒரு கனி நிறைந்த மரமாக, ஒலிவ மரக்கன்றுகளாக உங்களை மகிழ்ச்சியடைய செய்கிறவர்களாக இருப்பார்கள். அதை நம்முடைய கண்கள் காணும். அநேகருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் கலங்கரை விளக்காக தேவன் அவர்களை உயர்த்தி வைப்பார். இயேசு கிறிஸ்துவின் சாயலைப் பெற்று ஆவியானவரால் நடத்தப்படுகிற வாழ்க்கைக்கு அவர்களை பயிற்றுவியுங்கள். அப்போதுதான் அவர்களிலிருந்து ஆவியின் கனி வெளிப்படும். அதாவது, அவன் நற்பண்புகள் நிறைந்தவனாய் காணப்படுவான். எப்படி ஒரு வண்ணத்துப் பூச்சி தன் அழகிய உருவத்தை காட்டி தான் மாற்றமடைந்திருக்கிறதை மற்றவர்கள் அறிய வைக்கிறதோ, அதே போன்று அவர்களுடைய கனிகளினால் தேவன் அவர்களை அறியப்பண்ணுவார்.

தேவன்தாமே இந்த மாற்றத்தை நம் பிள்ளைகள் வாழ்வில் பெற உதவி செய்வாராக.

---

## Prayer Works Wonders

*Prayer is a Golden ladder through which my request are taken to my Heavenly Father His blessing are brought down.*

*Prayer is a golden thread linking me with people near and far.*

*Prayer is the most effective medicine healing the hidden wounds of the heart.*

*Prayer is the costless cosmetic that beautifies the face and makes it shine.*

*Prayer is powerhouse empowering me perform the most difficult tasks of life.*

*Prayer is the best lubricant enabling the wheel of daily life roll on without any friction*

*Prayer is a vehicle that takes me from the deepest depression to the height of joy!*

*Prayer is the most powerful weapon to defeat the enemy.*

*Prayer is a panacea for all the evils that haunt the modern society.*

*There is no end to the power of Prayer*

*"More things are wrought by prayer than this dreams of" and Lord Tennyson. How far have we realised this?*



# கடவுள் மனிதனாக பிறந்தது ஏன்?

உலக சரித்திரத்தைக் கிறிஸ்துவுக்கு முன் என்றும் (கி.மு) கிறிஸ்துவுக்குப் பின் என்றும் (கி.பி) பிரித்த சரித்திர நாயகனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசுவின் பிறப்பை ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கும் பல கோடி மக்கள் கொண்டாடுகின்றனர். 2024 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் கடவுள் மனிதனக "இயேசு" என்ற பெயருடன் பிறந்த நோக்கம் என்ன? என்பதைச் சற்று தியானிப்பது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். மூன்று முக்கிய நோக்கங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.



## 1. கடவுளை வெளிப்படுத்த (To REVEAL God)

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுவே அவரை வெளிப்படுத்தினார் என்று வேதம் கூறுகிறது (யோவான் 1:18). கடவுளின் அன்பை, மனதுருக்கத்தை, இரக்கத்தை, வல்லமையை வெளிப்படுத்தும்படியாக இயேசு பிறந்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னார் (யோவான் 12:45; 14:8-9). கடவுள் மனிதனாக இவ்வுலகத்தில் "இயேசு" என்ற பெயரில் பிறந்தார். அவர் மனிதனோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மனிதனுடைய துக்கங்களில் பங்குபெற்று மனிதனை அவனுடைய எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கிறவராகத் தம்மை வெளிப்படுத்தினார்.

## 2. மனிதனை விடுவிக்க (To REDEEM Man)

இயேசு இவ்வுலகில் இரட்சகராக, விடுவிக்கிறவராகப் பிறந்தார். இயேசு என்ற பெயருக்கு அர்த்தம் இரட்சகர் என்பது (மத்தேயு 1:21). இயேசு நம்மை கீழ்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்க பிறந்தார்.

**பாவம் :** பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ.1:15). பாவம் இல்லாமல் பிறந்த இயேசு நம்மை சகலவித பாவத்திலிருந்து விடுவிக்கிறார் (மத்தேயு 1:21). நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்கவே இயேசு மனிதனாக வெளிப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:5; எபிரெயர் 9:26). இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் நம்முடைய ஜென்ம பாவங்கள், கரும பாவங்கள் அனைத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). உலகத்தில் பிறக்கிற அனைவரும் பாவத்தில் தான் பிறக்கிறோம் (சங்.53:5). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). ஆனால் இயேசு நமக்குப் பாவத்திலிருந்து விடுதலையும் நித்திய வாழ்வையும் அளிக்கிறார்.

**சாபம் :** பலவிதமான சாபங்களின் நிமித்தம் தோல்விகளையும், இழப்புகளையும், ஏமாற்றங்களையும் அடைந்து வரும் மக்களின் சாபங்களை நீக்கி விடுவிக்க இயேசு உலகத்தில் வந்தார். இயேசு மனுகுலத்தின் அனைத்து சாபங்களையும் தன்மேல் சிலுவையில் ஏற்றுக் கொண்டபடியால் மனிதர்களின் சாபங்களை நீக்கி அவர்களை ஆசீர்வதிக்கிறார் (கலா. 3:13).

**வியாதி :** இயேசு நம்மை வியாதிகளிலிருந்து விடுவித்து நமக்குச் சுகவாழ்வு தரும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் (மத்தேயு 8:17). அவருடைய

தழும்புகளால் சுகமாகிறோம் (ஏசாயா 53:5) என்று பைபிள் கூறுகிறது. சகலவித நோய்களையும் தீராத வியாதிகளையும் சுகமாக்க இயேசு வல்லவர்.

**பயம் :** இயேசு நம்மை பயத்திலிருந்து விடுவிக்கிறார். ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே பிடிக்கப்பட்டுள்ள யாவரையும் விடுதலைபண்ண இயேசு பிறந்தார் என்று வேதம் கூறுகிறது (எபி.2:13). இயேசு பிறந்த பொழுது தூதர்கள் பலமுறை "பயப்படாதிருங்கள்" என்ற நற்செய்தியை ஜனங்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 1:13,30;2:10; மத்தேயு 1:20,24). பயம் ஒரு கொடுமையான உணர்ச்சி. எதிர்காலத்தைக் குறித்த பயம், மரண பயம், தோல்வி பயம் என்று பலவித பயங்கள் இன்று மனிதனை வாட்டுகின்றன. ஆனால் இயேசு இவையெல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்.

## 3. பிசாசின் கிரியைகளை அழிக்க (To RUIN the works of Satan)

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே மனுஷகுமாரன் வெளிப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:8). பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் நானோ உங்களுக்கு ஜீவன் கொடுக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10) என்று இயேசு கூறினார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட பலரை இயேசு விடுவித்தார் (அப்.10:35). இறுதியில் சிலுவையில் பிசாசை ஜெயித்து, அவன் கிரியைகளை அழித்தார். துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ.2:15). இயேசுவை ஏற்றுக்கொண்டு வசனத்தின்படி வாழும் ஒவ்வொருவருக்கும் பிசாசின்மேல் ஜெயத்தை தேவன் தருகிறார் (1 யோவான் 2:14). பொல்லாங்கனாகிய பிசாசு நம்மை தொடமுடியாது (1 யோவான் 5 : 18). அல்லேலூயா!.

### இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள்

உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் யாரெல்லாம் இடம் கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் என்று வேதம் கூறுகிறது (யோவான் 1 : 12). இயேசு இன்றும் உங்கள் இதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார் (வெளி.3:20). அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கும்பொழுது உங்கள் உள்ளத்தில் அவர் வருவார். விடுதலையும் சமாதானமும் அளிப்பார். இன்று உங்கள் உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் உண்டா?

– ஆசிரியர்

**THE SON OF GOD BECAME A MAN SO HE COULD ENABLE MEN TO BECOME SONS OF GOD.**

*C.S. Lewis*



## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 7 (சரியான விடைகள்)

1. கண் கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை உன்னிடத்தில் செய்த (10:21).
2. தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் (16:17).
3. தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே (5:11).
4. தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ (18:13).
5. கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும் உன் மாடுகளின் பெருக்கமும் உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் (28:4) (அல்லது) கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் (28:5).
6. சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி (33:29).
7. கண் அவனுக்கு இரங்க வேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் (19:21).
8. தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகக் கடந்துபோகிறவர் என்பதை இன்று (9:3).
9. கண்களை மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் ஏறெடுத்து உன் கண்களினாலே அதைப்பார்; இந்த யோர்தானை (3:27).
10. தேவனாகிய கர்த்தரை விட்டு விலகும்படி அவன் உன்னை ஏவினபடியினால் அவன் சாகும்படி (13:10).
11. வீட்டில் பெரிதும் சிறிதுமான பலவித (25:14).
12. தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே (8:7).
13. நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் (33:25).
14. தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து (2:7) (அல்லது) தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடே கூட (31:6).
15. தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் (6:5).
16. சகோதரனிடத்திலோ உனக்கு வரவேண்டியதை உன் கை (15:3).
17. வாயினால் சொன்னதை (23:23).
18. தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் (4:24).
19. தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் (21:23).
20. பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை (4:31).
21. தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும் சகல ஜனங்களையும் நிர்மூலமாக்கக்கடவாய்; உன் கண் அவர்களுக்கு (7:16).
22. தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்பவனையே உனக்கு ராஜாவாக (17:15).
23. தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் (12:19).
24. திராட்சத்தோட்டத்திலே பற்பலவிதமாக விதையை (22:9).
25. தேவனாகிய கர்த்தர் தாமே உனக்கு முன்பாகக் (31:3).
26. சத்துருக்களுக்கு விரோதமாய்ப் புறப்படும்போது தீதான காரியங்கள் எல்லாவற்றிக்கும் (23:9).
27. சகோதரரிலும், உன் தேசத்தின் வாசல்களிலுள்ள அந்நியரிலும் ஏழையும் எளிமையுமான கூலிக்காரனை (24:14)
28. தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக்கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப்பொருளை (20:14).
29. தகப்பனைக் கேள் அவன் உனக்கு (32:7).
30. தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணும்போது கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையும் (11:29).

## போட்டி எண் : 7 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: S.முத்துலெட்சுமி; கிரிஜா; கிறிஸ்டி; விஜி, அன்னாள், ஜெயசிலின், முத்துகோபால்; சித்ரா பிளஸ்சி; குளோரி; எஸ்தர்; கலைவாணி; மரகதம்; புஷ்பவள்ளி; T.கலா; இவாஞ்சலின்; பிரின்ஸி ஜெனிபர்; பிரபா; லீதியாள்; சுமதி ஜோசப்; கோகிலா; பூங்கோதை; ராணி பிளஸிங்; ராதாமணி; மாது; |**போர்ட் பிளேர்:**J .M.ஜாக்லின் : ஜெயந்தி;|**திருநின்றவூர்**: வின்சி; அனிதா; மாலதி; தெரசா; எழிலரசி; லீலாபரணி; கேத்ரின்; | **சேத்துப்பட்டு**: மாதரசி; ஷாலினி; ரெக்ஸி ஈஸ்வரன்; பெர்சியாள் செல்வி; லெஷ்மிகாந்தா; சுகந்தி பெனடிக்; மரகதம்;|**ஸ்ரீ வில்லிபுத்தூர்**: எஸ்தர் இந்திரா; சத்யா; காபிரியேல்; கிருபா;J.வசந்தா; மெசி; பாஞ்சாலி Tr; மாதவி; | **மடத்துக்குளம்** : சரண்யா; கிரேஸ்மேரி; ஜெனிட்டா ஜூலியட் மேரி; சேர்மக்கனி; |**உடுமலைப்பேட்டை**: ஜெயந்தி; சுகந்தி; சந்தனா மதன்; பிரிஸ்கில்லா; பிரியா; |**தேனி**: செண்பகபுஷ்பா ஜேம்ஸ்; கார்த்திகேயாயிணி; கிருபா; திருவியசெல்வி; |**எடப்பாடி**:சுதா திருநாவுக்கரசு; பிருந்தா ஸ்ரீ; பிரியதர்ஷினி; எப்சிபா ஜோயல்; |**கடையநல்லூர்** : செல்வி இந்திராணி; வினோலியா; பெல்சியா; சுகன்யா; ஸ்டெல்லா; தங்கராஜ்; | **ஆலங்குளம் (வி)** : R.V.பிளாரன்ஸ்; ஸ்டெல்லா மேரி; மரியாள்; ரெஜினா சாரு; |**இறச்சகுளம்**: ஜெஸ்மின்; எஸ்தர்; மகிழ் ஜெயந்தி; ஷாலினி; M.கலா; | **திருச்சி** : கிறிஸ்டி மகாலெட்சுமி; ஷெர்லி; சாந்தி; ஜஸ்டஸ் டேனியல்; |**நாகமலை**: விஜிலா; ஹில்டா எலிசபெத்; ஆனந்தி; |**இராமன்புதூர்**: லீதியாள்; அபிகாயில்; ஜான்சிராணி; |**K.T.C.நகர்**: பிரேமாபாய்; சிவகாமி சாராள்; ஷில்வியா; ரத்தினமாலா; | **சென்னை** : மெர்லின் ஹெலன் பிரிதியா; பொன்மலர்; மேரிகுட்டி; சின்னராஜ்; ஆஷா; | **கொத்திமங்கலம்**: உமா தேவஜோதி; |**ஆறுமுகநேரி**: ஜோதி மீனா; பாக்கியா; சரோஜா; |**புளியங்குடி**: சுந்தரி; ஜெயமணி; ஜெபஞானம்; |**வேப்பம்பட்டு**: மீனாட்சி தரணி; ஆர்த்தி பன்னீர் செல்வம்; ஜோஸ்மேரி; |**கோயம்புத்தூர்**: கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சில்; | **நாசரேத்**: எஸ்தர்; மெர்சி; தாசன் மோசஸ்; |**குரோம்பேட்டை**: கோமதி குமார்; பிரியா; |**சேலம்**: பாட்ரிஷியா டேவிட்; ஜான்சி ராணி; |**கவரைப்பேட்டை**: புவனா; தங்கம்; |**திரேஸ்புரம்**: சில்வெஸ்டர்; புருசிமா; |**கோவில்பட்டி**: ரேச்சல்; வால்டர்சிங்; |**கூத்தாநல்லூர்**: ஷெர்லி; கிளமாண்டின்; S.A.M.பாஸ்டியன்; |**கடாட்சபுரம்** : ரேவதி கில்பர்ட்; சுசிலா; |**மதுரை** : கனகவல்லி; மெர்சிராஜ்; | **திருப்பூர்**: பரிமளா; புஷ்பா மேரி; |**ஆழ்வார் திருநகரி**: அமுதா; பனிமலர்; |**மேல அனுப்பானடி**: அனிதா; ஜெயா; |**திசையன்விளை**: செல்வ பாக்கியம்; |**ஆவடி**: சந்திரா சாலமோன்ராஜ்; |**குற்றாலம்**: வேளாங்கன்னி; ரூத்; | **கொட்டிவாக்கம்**: எஸ்தர் விஜயராணி; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; | **சாத்தூர்**: சரோஜா; |**அச்சிறுப்பாக்கம்**: தமிழ்செல்வி; |**K.P.வலசை**: A.P.சீலி; |**கோபி**:ருக்மணி; **முத்தையாபுரம்**: பிரியா; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**பெருமாள்புரம்**: சந்திரா; |**கல்லல்**: அபிஷாக்; |**ஆழ்வார் குறிச்சி**: ஹரிலீலா; |**திருவாரூர்**: ரேணுகா; |**கூவத்தூர்**: எட்வர்ட்; |**முக்கூடல்**: முத்துகிருஷ்ணன்; |**தர்மபுரி**: ரூத்; |**பவூர்சத்திரம்**: ஜெசிலி; |**வடக்குகோணம்**: மரியநேசம்; |**திண்டுக்கல்**: லதா ஜான்சன்; |**பசுமலை**: கிருபா அருணாச்சலம்; |**புதுக்கோட்டை**: லலிதா; |**ஏழாயிரம்பண்ணை**: ஜாய்ராஜா; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; |**சுரண்டை**: குளோரிஞானம்; |**அகஸ்தியர்பட்டி** : நிர்மலா; |**ஆம்பூர்**: கிரிஜா ஷோபியா; |**அச்சரப்பாக்கம்**: விஷ்ணுபிரியா; |**அரூர்**: சங்கீதா; |**மப்பேடு**: ஜான்சிராணி; |**அய்யம்பாக்கம்**: அம்மணி; |**கடம்பாடி**: வின்சென்ட்ராஜ்; |**திருமலைநகர்**: தேவன் புவனேஸ்வரி; |**அரசூர்**: ரோஸ்லின் சாந்தி; |**பழைய காயல்**: எலிசபெத்; |**பெருங்குளம்**: பியூலா ஜோபாய்; |**கம்பம்**: ஜோதிமணி; |**திருவைகுண்டம்**: சங்கீதா முத்துக்குமார்; |**திருச்செந்தூர்**: தேவதாஸ்; |**சூளைமேடு**: பூங்கனி; |**T.N.பாளையம்**:சுஜா; |**பள்ளிக்கரணை**: புவனேஷ்வரி; |**திருவண்ணாமலை** : மல்லிகா; |**புதுச்சாம்பள்ளி**: புஷ்பா @ கிரேஸி; | **ஆத்தூர்**: பிளாரன்ஸ்; |**மேடவாக்கம்**: பியூலா

## போட்டி எண் : 7 (சரியான விடை எழுதியவர்கள்) ...

ஜாய்ஸ் சுகந்தி; |**செம்பாக்கம்**: மரகதலீலா; |**கடலையூர்**: ஆபிரகாம்; |**திருவள்ளூர்**: ராஜேஸ்வரி; |**தூத்துக்குடி**: நிம்மி; |**குறிச்சி**: இம்மானுவேல்; |**உக்கடம்**: ரத்தினம்; |**நத்தக்காடையூர்**: ஏசையன்; |**செண்பகராமன் புதூர்**: வனிதா; |**கள்ளக்குறிச்**சி: தங்கம் சாக்கோ; |**ஏர்வாடி**: மரகதம்; |**இளையரசனேந்தல்**: மெர்ஸி; |**வெண்ணாம்பட்டி**: எப்சிபா; |**வளசரவாக்கம்**: ஜெபசெல்வி தனராஜ்; |**பழனி**: பிரீத்தி.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-8
## யோசுவா பொருத்துக (இருப்பிடத்துடன் விடை எழுதுவும்)

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | - காலேப் |
| 2. | கல் | - தாண் புத்திரர் |
| 3. | ஏத் | - ஆர்லோத் மேடு |
| 4. | சந்திரன் | - அர்பா |
| 5. | விருத்தசேதனம் | - நப்தலி |
| 6. | ஆசரிப்புக்கூடாரம் | - யோசுவா |
| 7. | ஏரொகேல் | - அதோனிசேதேக் |
| 8. | கில்கால் | - ஒத்னியேல் |
| 9. | பன்னிரண்டு கற்கள் | - பீடம் |
| 10. | லேசேம் | - சீலோ |
| 11. | இருப்பு ரதங்கள் | - எகிப்தின் நிந்தை |
| 12. | எண்பத்தைந்து வயது | - ஆயலோன் |
| 13. | நூற்றுப்பத்து வயது | - சாட்சி |
| 14. | குறிசொல்லுகிறவன் | - ராகாப் |
| 15. | எருசலேமின் ராஜா | - யோர்தான் |
| 16. | பெரிய மனுஷன் | - ஆகான் |
| 17. | கீரியாத்செப்பேர் | - கிணறு |
| 18. | அலங்கத்தின் மதில் | - கானானியர்கள் |
| 19. | பொன்பாளம் | - பாலாம் |
| 20. | ஆறாம் சீட்டு | - கிபியோன் |

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.12.2024



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## மதுரை, சென்னையில் நடைபெற்ற வாலிபர் உபவாச ஜெபம்









## கடலூர், சங்கரன்கோவில், கோவை மண்டல வாலிபர் முகாம்கள்









## தூத்துக்குடி தெற்கு, கிழக்கு மண்டல சிறுவர் முகாம்கள்













BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664